மா. சிங்காரவேலுவின்

# கடவுளும் பிரபஞ்சமும்



சீதை பதிப்பகம்

# கடவுளும் பிரபஞ்சமும்

மா. சிங்காரவேலு

NATIONAL INSTITUTE OF LEADERSHIP TRAINING
#AP.508,, 22nd Street, TNHB Colony,
Korattur, Chennai - 600 080.

சீதை பதிப்பகம்
சென்னை - 600 005.
☎ 9790706549 / 9790706548

நூல் கிடைக்குமிடம் :

**கௌரா புத்தக மையம்**

செயிண்ட் ஜான் சர்ச் வணிக வளாகம் 9,ராக்கின்ஸ் சாலை,
திருச்சிராப்பள்ளி-1 ☎ : 99520 34876 / 0431 2419584

விலை : ரூ. **25.00**

* முதற் பதிப்பு : ஜூலை 2011

* © உரிமை : பதிப்பகத்திற்கே

* பதிப்பாசிரியர் : **எஸ். கௌமாரீஸ்வரி** M.A., M.L.I.S.,

* நூலின் பெயர் : கடவுளும் பிரபஞ்சமும்

* பக்கங்கள் : 72

* ஒளி அச்சு : ஜெய் ஜீனா

* வெளியீடு : சீதை பதிப்பகம்
10/14, தோப்பு வெங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

* அச்சிட்டோர் : கிளாசிக் பிரிண்டர்ஸ் செ - 2

CODE : **1009**

**கௌரா ஏஜென்ஸீஸ்**

10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

☎ : 044-2844 3791 / 97907 06548 / 97907 06549

www.gowrabookfair.com. E-mail : gowra_09@yahoo.in / gowra09@gmail.com


அம்மாவுக்கு...

# நூன்முகம்

சென்ற வருடம் நமது தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள், "குடி அரசு" க்கு மத சம்பந்தமாகச் செய்துள்ள விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவினைச் சில வியாசமாக எழுதக் கேட்டுக் கொண்டார். நமது அசவுக்கியத்தினிமித்தம் , அவர் வேண்டு கோளுக்கிணங்க முடியாமற் போயிற்று. சென்ற இரண்டொரு வருடங்களில் பிரபஞ்சத்தைப்பற்றிச் சில நவீன நூல்கள் பிரசுரிக்கப்பட்டன. "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற ஓர் நூல், பகுத்தறிவுச் சங்கத்தைச் சேர்ந்தவராகிய "கோகன்" என்ற பெரியார், மத அனுகூலமாக எழுதின சில விஞ்ஞான நிபுணர்களைக் கண்டித்து எழுதியுள்ளார். இந்த நூலில், மதங்களுக்கு விஞ்ஞான விசாரணையின்படி ஆதரவு கிடைக்க வழியில்லையென்று பொதுவாகக் காட்டியுள்ளதேயொழிய, விஞ்ஞான விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்ட உறுதியான விஷயங்களைக் கொண்டு, மதங்களுக்கு ஆதாரச் சொல்லாகிய கடவுளை விசாரிக்கப் புகுந்தாரில்லை. பல நாத்திக வாதங்களும், கேவல (Abstract) வாதங்களாகவே இருந்து வருகின்றன. இந்த சமயத்தில் பிரபஞ்சத்தைப்பற்றிப் பலவித ஆராய்ச்சிகளின் பலனாக சிற்சில விருத்தாந்தங்கள் புதிதாக தெரியவந்தன. இந்த விருத்தாந்தங்களைக் கொண்டு, கடவுள் இருப்பை விசாரிக்கத் தொடங்கி, அதன் முடிவுகளை "கடவுளும் பிரபஞ்சமும்" என மகுடமிட்டு "குடி அரசில்" எழுதி வந்தோம். இந்தக் கட்டுரை களைப் புத்தக ரூபமாக அமைக்கும்படி சுயமரியாதைத் தோழர்கள் செய்த ஏற்பாடு மிகவும் கவனிக்கத்தக்கதே. "குடி அரசு" பிரசுரங்களில் ஒன்றாக இச் சிறு புத்தகத்தைப் பதிப்பிக்கச் செய்தது போற்றத்தக்கதாகும். இச் சிறிய நூலுக்கு ஆதாரமாகக் கொண்ட நூல்களில் சிலவற்றைக் கடைசியில் கண்டுள்ளோம். இந்த வாதங்களை முற்றிலும் அறிய வேண்டியவர்கள், இதன் ஆதார நூல்களை ஆங்கிலத்திலாகிலும், அல்லது மொழி பெயர்ப்புகளிலாகிலும் தொடர்ந்து படிக்கலாம்.

மயிலை, நடுக்குப்பம்,
சென்னைப் பட்டணம்
12-2-1932

**மா. சிங்காரவேலு**

# உள்ளே....

1. கடவுள் தங்கும் இடம் எது? ................................ 1

2. கடவுளைப்பற்றிக் கூறும்
பொருத்தமற்ற கூற்றுகள் ............................ 8

3. கடவுள் என்றால் என்ன? ................................ 15

4. கடவுள் செய்யும் வேலைதான் என்ன? .............. 21

5. கடவுளுக்கு நமது உலகில்
வேலை உண்டா? ........................................... 31

6. கடவுளால் நடப்பது ஒன்றுமில்லை .................... 37

7. கடவுள் நல்லவரா, கெட்டவரா? ........................ 43

8. கடவுளுக்கும் உலகத்துக்கும்
ஒரு சம்பந்தமும் இல்லை ............................. 51

9. கோழி முதல் உண்டானதா? அல்லது ................ 55
முட்டை முதல் உண்டானதா? ........................ 55

10. கல்லுக்குள் தேரையும்
மாங்கொட்டையில் புழுவும் .......................... 61

# கடவுளும் பிரபஞ்சமும்

# GOD AND THE UNIVERSE

### முதல் அத்தியாயம்

## கடவுள் தங்கும் இடம் எது?

நாளிதுவரை தெரிந்துள்ள பிரபஞ்சத்தில், எங்கேயாகிலும் கடவுளுக்கு இடமுண்டா? என்று வான ஆராய்ச்சி செய்வோர் கண்டாராய்ந்தும், எந்தப் பிரபஞ்ச மூலையிலேனும் கடவுளைக் காணவில்லை என்று சொல்லலாம். பிரபல வான நூலாசிரியராகிய ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ் என்பவர் (Sir James Jeans) தனது நூலாகிய 'பிரபஞ்ச வான நூலில்' (Cosmogony and Astronomy), பிரபஞ் சத்தில், எங்கேயாகிலும் சைதன்யம், அதாவது மனம் (Mind) இருப்பதாக யூகிக்க ஆதாரமில்லை என்கிறார். நமது பூமியைத் தவிர மற்ற எங்கேயாகிலும் பிரபஞ்சத்தில் உயிர் (Life) அல்லது சீவன் உளதோவெனில், அது சந்தேக மென் கிறார். நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்சத்தில் கடவுளுக் காகிலும், சீவனுக்காகிலும் இருக்க இடமில்லை யெனில், மற்றவேறு எந்த இடம் இருக்கக்கூடும்? இதன் சம்பந்தமாக ஒரு ருசிகரமான கதையொன்றுண்டு. நட்சத்திர ஆஃபீஸ் (Observatory) ஒன்றில் வானசாஸ்திரி ஒருவர் இருந்தார். அவர் கிறித்துவ மார்க்கத்துப் பாதிரி. அவரிடம், வானத்தைப் பார்க்கவேண்டுமென ஒருவர் சென்று, தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாக (Telescope) காணப்படும் பற்பல வான மண்டலங்களைக் காட்டும்படி கேட்டுக்கொண்டார். வானசாஸ்திரி முதலில் பூமிக்கு அருகிலுள்ள சந்திர மண்டலத்தைக் காட்டி, அடுத்துள்ள நவக்கிரக மண்டலத்தையும், சூரிய மண்டலத்தையும்

காட்டி வந்தார். இவைகளை எல்லாம் ஆச்சரியத்துடன் பார்த்து வந்தவர், பாதிரியை நோக்கி, "அய்யா தாங்கள் காட்டி வந்த பற்பல மண்டலங்களையும் பார்த்து வந்தேன். ஆனால், இவைகளுக்கப்பால் உள்ளதாகச் சொல்லும் பரமண்டலத்தையும், அதில் வீற்றிருக்கும் பிதாவையும் காட்டவில்லையே" என்றார். பாதிரியார் இந்தக் கேள்வியைக் குறும்பென்று கருதி, அவரிடம் ஒன்றும் சொல்லாமலே அவரை விடை கொடுத்தனுப்பிவிட்டார். ஆனால், தற்கால வான நூலோர், இந்தக் கேள்வியைக் குறும்பென்று கருதுவதில்லை. "மெய்ஞ்ஞான நோக்கு" என்பதே "விசாரித்து உணர்தல்" ஆனபடியால் கேள்வி எவ்வித ஆபாசமானதாயிருந்தாலும், அதனைத் தாழ்மையோடு ஏற்றுக்கொண்டு, அதற்கு விடை உண்டோவென ஆராய்ச்சி செய்யப்புகுவர்.

"அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" என்ற தாயுமானார் தத்துவத்தைப்பற்றி நமக்கு ஒன்றும் விளங்க வில்லை. பிரபஞ்சத்தில் பிரகாசமில்லாத இடம் அதிகமென்று வான நூலோர் சொல்லுகின்றார்கள். "கடவுள்" பிரகாசமென்றால், இருள் யாது? கிறித்தவர் சொல்லுவது போல் இருள் பிசாசென்றேற்படும். பிர பஞ்சத்தில் இருளடைந்த இடங்களே அதிகமாதலால், பிசாசே பெரிதென்றேற்படும். தாயுமானார் தத்துவம் இந்த ஆபாசங்களுக்கெல்லாம் இடம் தரும். ஆதலின் கவிஞர்களிடமிருந்து உண்மை ஞானத்தை எதிர்பார்க்க முடியாது.

"தூணிலுமிருப்பார் துரும்பிலுமிருப்பார்!" என்று பிரகலாதன் சரித்திரமொன்றைக் கட்டிவிட்டார்கள். இது சர்வ வியாபி என்ற கடவுளின் லட்சணத்தைக் குறிக்கும் கதையாகும். வான நூலின்படி பிரபஞ்சமெங்கும் வியாபித்துள்ளவை தூசும் தும்புமே. இதனைக் கடவுளென்பதில் அர்த்தமில்லை. ஆதலின், கண்ட வரையில், கடவுள் சர்வ வியாபி என்று சொல்ல யாதொரு

நியாயமுமில்லை. வேதாந்திகள் சொல்லும் சத்து, சித்து, ஆனந்தமும் பிரபஞ்சத்தில் காணோமே. அங்குமிங்கும் ஓடுங்கிரணங்களும், (Radiation) தூசும், (Dust) பரமாணுக்களும் (Electrons and Protons) இருப்பதாக யூகையேயொழிய நிலைத்திருக்கும் சத்தாகிலும், அறியும் சித்தாகிலும், உணர்வாகிய ஆனந்தமும் மனிதனுடைய எண்ணத்தின் அதாவது வார்த்தை, அல்லது சொற்கள் அன்னியில் வேறு தனித்து இருப்பதாக யூகிக்க இடமே இல்லை. உலகில் பரவியுள்ள பற்பல தத்துவ ஞானங்களெனக்கூறும் (Philosphies) வார்த்தைகள் யாவும் கற்பனைகளாக முடிகின்றபடியால், எதையும் அனுபவமாகப் பார்க்க முடியவில்லை. அந்தந்த தத்துவப் பொருள்களெனப்படும் சொற்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டே இருக்கின்றன. கடவுளைப் பற்றிப் பேசும் ஞானிகளும், பக்தர்களும் யானையைக் கண்ட குருடர்களைப்போல் பேசுகின்றார்கள். யானையைக் கண்ட குருடர்களாகிலும் ஏதோ ஒரு மிருகத்தைக் கண்டு தங்கள் அனுபவத்திற்குத் தக்கவாறு சொல்லுகின்றார்கள். ஆனால் ஞானிகளோவெனில், யாதொன்றையும் பார்க்காமலேயே வாய்க்கு வந்தவாறு சொற்களைக் கட்டிவிடுகிறார்கள். கடவுள், ஆன்மா, பிரம்மன், சிவன், விஷ்ணு முதலிய முப்பத்து முக்கோடி தெய்வங்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கின்னரர், கிம்புருடர், அஷ்டபாலர் முதலிய உபதெய்வங்களும், இருளன், வீரன், சூரினியன், காட்டேரி, நொண்டி, சண்டி, சாமுண்டி, தோட்டி, தூண்டி, நல்லண்ணன், சின்னான், பெத்தண்ணன், மாரி, முனியன், சங்கிலி, பாவாடை, குழி இரிசி முதலிய பேய் பிசாசுகளும், நாம் தொட்டிலில் பழகிய சில வார்த்தைகளைக் கொண்டு வயதுவந்த பிறகு கட்டிய கற்பனை வார்த்தைகளேயாகும். இந்த சொற்களுக்காகத்தான் உலகத்தில் எங்கும் கோயில்களும், மசூதிகளும், சர்ச்சுகளும், கெதிட்ரல்களும் கட்டப் பட்டிருக்கின்றன

என அறிக! இருளன், வீரன், சூரினியனுக்குப் பிர பஞ்சத்தில் இடமில்லை எனில், பக்தர் வணங்கி வழிபடும் ஈசுவரனுக்கு இடமேது? பாமர ஜனங்கள் வணங்கும் கோடானுகோடி சிறுதெய்வங்கள் கற்பனை எனில், அறிஞர்கள் வணங்கும், அல்லது, போற்றும் பிரமமும், கற்பிதமன்றோ?

உலகை நாம் தினம் பார்த்து வருகின்றோம். அதன் மேலுள்ள பொருள்கள் பலவற்றைக் கையாளுகின்றோம். அனேகமாக உலகம் இன்ன பொருளை உடையதாக இருக்கிறதென்று தெரியும். உலகத்தில் உள்ள சகலமும் பரிசோதனையில் மண்ணாகவே முடிகிறது. இந்த மண்ணில், சிற்சில உயிர்கள் தோன்றி இருக்கின்றன. இவைகளும் மண்ணில் தோன்றி மண்ணிலேயே மடிகின்றன. அவ்வுயிர்களில் நாம் ஒன்று (From Dust to Dust). அதாவது மண்ணிலிருந்து வந்து மண்ணாய் போகின்றோ மென, கிறித்தவ வாக்கியமொன்றுண்டு. இதுதான் நாம் கண்டு வரும் காட்சி; இதுதான் பிரத்தியட்ச அனுபவம். நமது உலக மண்ணில் எங்கேயாகிலும் கடவுள் (god) என்ற பொருள் தங்கி வாழ இடமுண்டாவெனக் கேட்கின் றோம்? 'இருளன்' 'வீரனுக்கு' எங்கே இடமென்று கேட்கின்றோம்? "கன்னி அம்மனுக்கும்" "பச்சை அம்மனுக்கும்" "பெரிய பாளையத்தாளுக்கும்" எங்கே இடமென்று கேட்கின்றோம்?. இச் சிறு தெய்வங்கள் எல்லாம் ஆபாச வார்த்தைகளெனில், பெரிய தெய்வங் களும் ஆபாச வார்த்தைகளாகாவா? கடவுளென்பதும், தெய்வங்களென்பனவும், மோட்சமன்பதும், நரக மென்பதும், 'அய்ந்து கண்ணன்' போன்ற மழலைச் சொற்களே. இந்த மழலைச் சொற்களை இயேசு சொன் னாலும், மகமது சொன்னாலும், சங்கரர் சொன்னாலும், விவேகானந்தர் சொன்னாலும், காந்தி சொன்னாலும், இவையாவும் கேள்விப்பட்ட சொற்கள் - அல்லது பொருளைக் குறிக்கும் சொற்களாகா. தத்துவஞானிகள்

கூறும் பிரமமும் (Brahman), சத்தும் (Sat); சர்வமும் (Absolute), தெரியப்படாததும் (Unknowable), எண்ணமும் (Idea), இச்சையும் (Will), யாவும் கற்பனைகளென அறிக. இந்த கற்பனா வார்த்தைகளைக் குறித்து எழுதியுள்ள நூல்கள் எத்தனை! கட்டியுள்ள கட்டடங்கள் எத்தனை!! செய்யும் வாதங்களெத்தனை!!! இவைகள் யாவும் பாமர மக்களுக்கு மெய்ஞ்ஞானத் தெளிவு உண்டாகியதும், குப்பைத் தொட்டியில்தான் போடவேண்டி வரும். இதற்கு அய்ய மில்லை. காலந்தான் கடக்க வேண்டும். அன்றுதான் அந்த முடிவுக்கு அரும்பாடுபட்டு வரும் நமது பகுத்தறிவுச் சங்கத்தார்களாகிய சுயமரியாதைக்காரர்களுடைய எண்ணம் சித்திபெறும். அன்றுதான் பொதுவுடைமை யோருடைய முயற்சியும் பயன்படும். இந்த மெய்ஞ்ஞான உண்மையை நமது இந்திய உலகம் அறிந்துய்யுமாறு இந்தச் சிறு கட்டுரையை எழுதத் துணிந்தனம்.

இது நிற்க, கடவுளுக்குத் தங்க நமது உலகம் இடந் தராவிடினும், அதனைச் சுற்றியுள்ள பிரபஞ்சப் பொருள் களில் யாதேனும் இடம் கொடுக்குமாவென்று பார்ப் போம். நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்சப் பொருள்கள் யாவை?

நமக்கு அருகேயுள்ளது நமது சந்திரனாகும்; அதில் காற்றில்லை, தண்ணீரில்லை. இருளடைந்து தாங்காத குளிராக இருக்கும். அதில் எந்த உயிர் வாழ முடியும்? உயிர்வாழ முடியாவெனில் அங்கே கடவுளுக்கு என்ன வேலை? சிறு உயிர் வாழ முடியாத இடத்தில் பேருயிர் வாழ இடமேது?

சந்திரனுக்கு அடுத்திருக்கும் உலகங்களை நவக்கிரகங் களென்பர். அவ்வித உலகங்களில் இரண்டொன்றில் மாத்திரம் நமது உலகிலுள்ள சீதோஷ்ண நிலை இருப்ப தாக யூகிக்கப்படுகிறது. அவைகளில் உயிர் உண்டோ? அங்காரகனில் (செவ்வாய் கிரகம்) உயிர் ஏதாகிலும்

இருக்கலா மென்பது வெறும் உத்தேசம். ஆனால் அங்காரகன் நமது உலகத்தைவிட வயதில் மூத்த உலகமாதலால், உயிர் இருந்தால் நம்மைவிட விசேஷ அறிவை அவ் வுயிர்கள் படைத்திருக்க வேண்டும். அதற்கு சாட்சி இதுகாறும் ஏற்படவில்லை. சுக்கிரனில் தண்ணீர், நிலத்தைவிட மூன்று பங்கு அதிகமாக இருத்தலால், அதில் மீன்கள் உற்பத்தியாகி இருக்கலாம் என்பதோர் யூகை. சுக்கிரனில் மீன்கள் மாத்திரம் உற்பத்தியாகி இருந்தால், 'எதாபக்தா ததாதேவா' என்ற வேத வாக்கின்படி அவைகளில் கடவுள், மீன் வடிவமாக இருப்பார் போலும்! ஆனால், நமது கடலில் வாழும் மீன்களுக்குக் கடவுளிருப்பதாகத் தெரியாதாகையால் (சுக்கிரனில் வாழும் மீன்களுக்கும் கடவுள் இருப்பதாக நாம் எண்ண வேண்டியதில்லை.

நவக்கிரகங்களை விட்டபிறகு, நமது சூரியன் இருக்கிறது. சூரியன் நமது உலகத்தைப் போன்ற பல லட்சம் உலகங்களை விழுங்கிவிடக் கூடிய அவ்வளவு பெரிது. அது சுமார் பத்து கோடி மைல் தூரமிருந்து பிரகாசிக்கிறது: அது ஓர் பெரிய நெருப்புக்கோளம். அதன் அனல் வெளியில் 9000 டிக்ரியாம்! உட்புறத்தில் 40,000 டிக்ரியாம்!! நமது உலகில் 120, 125 டிக்ரிக்கு மேல் சகித்து வாழ முடியா. சூரியனில் அணுக்களும் நிலைக்க முடியாதென்றால், உயிர் நிலைத்திருப்பது எப்படி?

சூரியனுக்கு அப்பால் கோடானுகோடி சூரியர்களை நட்சத்திர ரூபமாகப் பார்க்கிறோம். அவைகளில் சில நமது சூரியனைவிட பத்து லட்சம் மடங்கு பெரிதாம். அவை 1,00,000 டிக்ரிக்குமேல் உஷ்ணமுளதாம். அவைகளில் பரமாணுக்களும் தங்க இடமில்லை போலும்! பரமாணுக் களுக்கும் தங்க இடமில்லாத நட்சத்திரங்களில், மகத்தாகிய கடவுள் தங்க வசதி ஏற்படுமா என்பதுதான் சந்தேகம்!! நட்சத்திரங்கள் இல்லாத வெளியில் பாழ்

(வெட்டவெளி) எங்கும் நிறைந்துளதாம். அதன் விசாலத்தைக் கணக்கிட முடியாதாம். இந்தப் பாழில் தாங்கக்கூடாத குளிர் இருக்குமாம். இந்தப் அகண்டாகாரப் பாழிலாகிலும் கடவுள் வசிக்கலாமோ? பிரபஞ்சத்திலுள்ள பொருள்களில் கோடானுகோடி நட்சத்திரங்களின் சூடு தாங்க முடியாமலிருக்கும். நட்சத்திர மில்லாத பாழில் கடவுளுக்கு என்ன வேலை என்று கேட்கலாம்? இதற்கு ஞானிகள்தான் விடை பகரல் வேண்டும். ஆதலின் பிரபஞ்ச முழுதும் கடவுளுக்குத் தங்க இடமில்லையென ஏற்படும்.

ஆனால், இதன் மத்தியில் எங்கோ ஓர் மூலையில் நாம் உற்பத்தியாகி, அற்பநாள் இருந்து வாழ்ந்து வந்த இடமும், போன இடமும் தெரியாமல் மறைந்து போகின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் நமது சொற்ப வாழ்வுக்கு வேண்டிய விஷயங்களைக் கருதாது, கடவுளர் என்றும், பேய் பிசாசுகளென்றும், காட்டேரி முனீசுவரன் என்றும் சொல்லப்படுகின்ற வியர்த்தமான சொற்களைக் கற்பித்துக் கொண்டு அவைகளுக்குக் கூட கோபுர மாடமாளிகை களைக் கட்டு வித்துக்கொண்டு, எல்லாம் உள்ள உலகில், வாய்க்குப் பிடி அரிசிகூட கிடைக்கப் பெறாத கோடானு கோடி மக்களை மூட நம்பிக்கையில் ஆழ்த்தி, நாமாகிய சில அற்ப தூசியின் சையோகங்கள், எல்லா சுகபோகங்களையும் அனுபவித்து வரச் செய்து வரும் சூழ்ச்சி என்றால், இந்தத் திட்டத்தை வெறுக்காத உத்தமன் எங்குமில்லையா? இதனை நமது தமிழ் நாட்டு அறிஞர் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டுகிறோம்.

### இரண்டாம் அத்தியாயம்

# கடவுளைப்பற்றிக் கூறும் பொருத்தமற்ற கூற்றுகள்

முதல் அத்தியாயத்தில் முகவுரையாக, கடவுள் ஒருவர் இருப்பாராயின், அவருக்குப் பிரபஞ்சத்தில் தங்குமிடமேது? என்ற விஷயத்தைக் குறித்துக் குறிப்பாக எழுதினோம். இது முதல் இனி எழுதப்படும் அத்தியாயங்களில் கடவுள், பிரபஞ்சம், சீவன்கள் இவர்களைப் பற்றிய சம்பந்தங்களைக் குறித்து, தத்துவ ஞானிகளும், மதத்தவரும், பக்தரும் கூறும் பலவித கூற்றினை விஞ்ஞான முகமாக நின்று விசாரிக்கப் புகுவோம்.

"கடவுள்" என்ற பதத்திற்குக் கொடுத்துவரும் பொருள்களுக்குக் கணக்கே இல்லை. வேதத்தில் கூறுவது ஒன்று, உபநிஷத்துகளில் கூறுவது வேறொன்று. புராண சமயங்களில் கூறும் பொருள் மற்றொன்று. கிறித்தவர், மகமதியர், புத்தர்கள் கூறுவதும் வெவ்வேறு. ஒரு பதத்தை பல்வேறு பொருள்பட எழுதியும், சொல்லியும் வருவதனாலேயே, அந்த வார்த்தை எதார்த்தத்தில் எதையும் குறிப்பதாகச் சொல்ல முடியவில்லை.

திருஷ்டாந்தமாக, இரண்டு பிரபல நூல்களில் சொல்லியுள்ள விவரங்களைச் சோதிப்போம். உபநிடத்துகளின் பிரகாரம் கடவுளை பரிசிக்கவாவது, நுகரவாவது, பார்க்கவாவது, கேட்கவாவது, ருசிக்கவாவது முடியாவாம்! ஆனால், அது சிறியதற்கும் சிறியதாம்; பெரியதற்கும் பெரியதாம்; எங்கும் வியாபகமாம்; காற்றாலும் அசைக்கப் படாதாம்; நெருப்பாலும் தகிக்கப்படாதாம்; தண்ணீராலும் குளிர் அடையப் பெறாதாம். இத்தகைய பொருளை என்னவென்று தெரிந்துகொள்வது? நித்யம், நிர்மயம், நிர்ச்சூன்யம் முதலிய எல்லாம் எதிர்மறையான பதங்

களாக இருக்கின்றன. இவைகளிலிருந்து என்ன பொருள் கொள்ள முடிகிறது? இப்பதங்களுக்கு வியாக்கியான மிடுவோருக்காகினும் தெரிந்ததென்ன? மற்றும் கடவுளைப் பற்றி உபயோகிக்கும் பதங்கள் யாவும் அகண்டம், பரிபூரணம், மறைபொருள் என்பவைகளும் நமது எண்ணத்திற்கு எட்டாதவை. இவ்விதமாக மனத்திற்கும், எண்ணத்திற்கும் எட்டாத வார்த்தைகளால் கடவுளைத் தெரிந்து கொண்ட மாதிரி உபநிடதங்களில் கூறப்பட்டுள்ளது. இது இவ்விதம் இருக்க, கிருத்தவ மதத்தாராகிலும் தெளிவுபடச் சொல்லுகின்றார்களா வெனப் பார்த்தால், அதுவும் காணோம். சகலத்தையும் படைத்தவரென்றும், பிதா வென்றும் கூறுகிறார்களே ஒழிய மற்றபடி தெளிவு அடையச் செய்வதாக இல்லை. குயவன் பானையைச் செய்த மாதிரியாக உலகைச் செய்தானா? அல்லது நம்மைப் பெற்ற தாய் தகப்பன்மார்களைப் போன்று உலகைப் பெற்றானா? என்று கேட்டால், அது தெரியாதாம். இவ்விதமாக இவ்விரண்டு பிரபல மதத்தவர்கள் தாங்கள் வாழ்த்தி வணங்கி வரும் தெய்வமென்பதைக் குறித்துச் சொல்லுகின்றார்கள். இந்தக் கஷ்ட நிலைமைக்கு அவர்கள் வந்தவுடன் இதற்காக எழுதியுள்ள சுருதியைப் பிரமாணமாகக் காட்டுகின்றார்கள். தங்கள் தங்கள் வேதமென்று கூறப்படும் கை ஏட்டுச் சொற்களை ஆதாரமாகக் காட்டுகின்றார்கள். வாயால் கூறும் வார்த்தைகளுக்கும், ஏட்டில் எழுதியுள்ள சொற்களுக்கும் என்ன வித்தியாச மோ அதையாகிலும் தெரிவிப்பதாகக் காணோம். ஏட்டிலிருந்து வாய் வார்த்தைக்கும், வாய்வார்த்தையிலிருந்து ஏட்டிற்கும் மாறிமாறிக் காட்டுகின்ற வழிகள் அன்றி வேறுயாதும் விளக்கிய பாடில்லை. கை ஏட்டுப் புத்தகங்களிலாகிலும் அல்லது அச்சிட்ட புத்தகங்களிலா கிலும் எழுதியாகிலும், அச்சிட்டாகிலும் இருக்கும் சொற் களைத்தான் நாமும் சொல்லுகின்றோம். நாம் சொல்லும் வார்த்தைகளையே

எழுதுகின்றோம்; அல்லது அச்சிடு கின்றோம், எழுதியிருப் பதாலேயே எழுதியுள்ள வார்த்தை களுக்குச் சிறப்பு அதிகம் வரப்போவதில்லை. ஆதலின், சுருதிகளெனக் கூறும் மத புத்தகங்களில் எழுதியுள்ள வார்த்தைகளுக்கு வந்த சிறப்பும், நிவேதனமும் என்ன? நியாயம் இவ்விதமிருக்க, சுருதிகளில் சொல்லியுள்ளதை விசேடமாகக் கருத வேண்டு மென்பது, தெரியாமைக்கு ஓர் பாசாங்கே அல்லாது வேறொன்றில்லை. மதத்தவர்களுடைய தெரியாமையைக் குறிக்க சுருதிகள் ஏற்பட்டுள்ளன வாகத் தெரிகின்றது. சொல்லும் வார்த்தைகளில் உள்ள ஆபாசங்களைக் காட்டினால் சுருதியைக் காட்டுகின்றார் கள். சுருதிகளி லுள்ள ஆபாசங்களைக் காட்டினால் தாங்கள் சொல்லும் சொற்களைக் காட்டுகின்றார்கள். இதே குறை வழக்கையே எல்லா மதத்தவர்களும் நியாயமாக எண்ணுகிறார்கள்.

தத்துவ ஞானிகளிலும், மதத்தவர்களுடைய நியாயத் திற்கு மேற்கொண்டு போவதில்லை, மதத்தவர் கடவுளைப் பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராய பேதங்களைப் போல், தத்துவஞானிகளும் கொண்டுள்ளார்கள். ஒரு தத்துவ ஞானி கடவுளைப்பற்றி தெரிவிக்கும் நியாயங்களை, மற்றொரு தத்துவஞானி கூறுவதில்லை. ஒருவன் போன போக்கை மற்றொருவர் பின்பற்றுவதில்லை. இருந்தாலும், சகல தத்துவஞானிகளும், மதத்தவர்கள் போலவே சொல்லோடு நிற்கவேண்டியவர்களேயன்றி, பொருளைக் குறிக்கும் தத்துவஞானி ஒருவருமில்லை. இந்திய தத்துவ ஞானிகள் ஒரு பிரபல வேத வாக்கியத்தை இந்த சந்தர்ப் பத்தில் கூறி வருகின்றார்கள். அதாவது, "ஏகம்ஸத் விப்ராபகு தாவதந்தி" இதன் பொருள் என்னவெனில், இருப்பது ஒன்று (அதனை) ஞானிகள் பல பெயரிட்டு அழைக்கிறார்கள். திருஷ்டாந்தமாக இருப்பது கடவுள் ஒன்றே. ஆனால் அதையே சிவனென்றும், பிரமன் என்றும், விஷ்ணு வென்றும், பிதாவென்றும், அல்லா வென்றும், உண்மை யென்றும், சத் என்றும், சித்தென்றும்,

ஆனந்தமென்றும், அப்ஸலூட் (Absolute) என்றும், அன்னோவபில் (Unknowable) என்றும், இன்னும் பற்பல பெயரிட்டு அழைக்கின்றார்கள். ஆனால், இந்த ஸகஸ்ர நாமங்களை (ஆயிரம் பெயர்) பரிசீலனை செய்தால், எல்லாம் வார்த்தை வித்தியாசமேயொழிய, எந்தப் பொருளையாகிலும் தெளிவு அடையத் தெரிவிப்பதாக இல்லை என்று அறியலாம். தெரியாத ஒன்றைக் குறித்துப் பதினாயிரம் பெயரிட்டழைப்பதால் தெளிவு பெற்றது என்ன? எல்லாவித மத நூல்களிலும், தத்துவ நூல்களிலும் உள்ள கஷ்டம் இதுவே. பிராட்லே (Brodley) என்ற தத்துவ ஞானி "தோற்றமும் உண்மையும்". (Appearance and Reality) என்ற ஒரு தத்துவ நூலை இயற்றியுள்ளார். அதிலுள்ள சொல் அடுக்குகள் போன்ற நூல் நான் பார்த்ததேயில்லை.

ஆனால், இவ்வளவும் சொல்லோடு நிற்பதே யொழிய விஷயஞானம் அடையச் செய்த பாடில்லை! பிரபல வேதாந்த நூல்களாகிய சங்கர பாஷ்யங்களை எடுத்துக் கொண்டாலும், அல்லது நமது தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் பிரக்யாதி பெற்றிருந்த பிரபல வேதாந்தி யாகிய ஈசூர், கணக்கு சச்சிதானந்த சுவாமிகள் இயற்றி யுள்ள பல நூல்களையாகிலும் பார்த்தாலும் எல்லாச் சொற்களும் வெகு அழகாகத்தான் இருக்கும். ஆனால், எல்லாம் வார்த்தை மாலைகளே! சொற்கள் ஒன்றுக் குப்பின் ஒன்றாக அழகாகக் கோக்கப்பட்டிருப்பதே யொழிய ஆரம்பத்திலிருந்து விஷய ஞானத்திற்குக் கிஞ்சிற்று அருகேயாகிலும் கொண்டு போவதாக இல்லை. எல்லாம் சொல்மயமே! அத்வைத வேதாந்தியாகிய சங்கராச் சாரியார் மற்ற மதங்களைக் கண்டிப்பதில் வெகு சாமர்த்தியத்தைக் காட்டுகின்றவர். ஏனைய மதங்களைக் கண்டிக்கும் நியாயங்களைக் கொண்டு தான் ஸ்தாபிக்கும் தத்துவத் தைக் கண்டிக்க முயன்றாரில்லை. ஏனைய மதங்களைக் கண்டிப்பதில் தன்னுடைய பகுத்தறிவை ஓர் பக்கத்தில் கட்டிவைத்து விட்டு, வேதவாக்கியமே தனக்கு

மேற்கோள் என்கின்றார். இவருடைய நியாய முழுமைக்கும், "தனக்குண்டு பிறருக்கில்லை" என்னும் சட்டவாதமே பொருந்தும். இவர் ஸ்தாபிக்கும் மதத்திற்கு சுருதியே ஆதார மென்றால், மற்றவர்களுக்கும் அவரவர் சுருதியே, அவரவர் மதங்களுக்குப் பிரமாணமென்று ஏன் விட்டு விடலாகாது? ஒவ்வொரு மதத்தவரும் தங்கள் தங்கள் மதப்பொருளுக்கு அதிகாரி தங்கள் தங்கள் சுருதிகளென்றால், எந்தச் சுருதியை உண்மை எனக் கொள்வது? இந்த வழக்கு எந்த மதத்தவருக்குமுண்டு. விவரித்துச் சொல்லவேண்டின், கிறித்தவர்களுக்கு (பைபில்) விவிலிய நூலும், இந்துக்களுக்கு வேதங்களும், மகமதியர்களுக்கு குர்ஆனும், புத்த பிக்குகளுக்குத் திரிபிடகங்களும், பிராமண நூல்களாகும். பைபிலில் "கர்மம்" என்ற தத்துவமில்லை. ஆனால் பிடக நூல்களிலுண்டு. மறுபிறப்பு பற்றி இந்துக் கள் நூலில் சொல்லப்பட்டுள்ளது. மகமதியர் இதை நம்பு வதில்லை. ஒரு மதத்திலுள்ள கோட்பாடுகள் மற்றொரு மதத்தில் இல்லை; அல்லது, அவை மறுக்கப்படுகின்றன. இவ்விதமாக ஒவ்வொரு மதமும், தத்தம் கோட்பாடுகளில் ஒன்றுக்கொன்று முரணடைந்திருப்பதால் எந்த மதச்சுருதி சொல்லுவது உண்மை? இன்னொரு திருஷ்டாந்தத்தை எடுத்துக் கொள்ளலாம். மதங்களில் முக்கியமான சித்தாந்தம் உலக சிருஷ்டியைப் பற்றிய விஷயமாகும். இந்த சிருஷ்டியைப் பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயங் களுக்குக் கணக்கு வழக்கில்லை. ஒவ்வொரு பக்தனும் தன் மனம் போனவாறு, கடவுள் உலகைச் சிருட்டித்தார் என்று எண்ணினதாக அவனவன் சுருதிகள் மூலமாகத் தெரிந்துகொள்கின்றனர். கிறித்தவன், "குயவன் மட்பாண் டத்தைச் செய்ததுபோல் உலகையும் உயிர்களையும் கடவுள் சிருஷ்டித்தார்" என்று சொல்லுகின்றான். இந்து, "பிரமா தலையிலிருந்தும் முகத்திலிருந்தும் வயிற்றிலி ருந்தும், கால்களிலிருத்தும் மனிதன் உற்பத்தியானான்"

என்கிறான். மகமதியன் "உலகைச் சிருட்டித்தார்" என்று பொதுவாகச் சொல்கின்றான். புத்தன் "சிருஷ்டியைப் பற்றி விசாரிப்பதே பயனில்லை" என்று சொல்லுகின்றான். இவற்றையெல்லாம் ஆராயும்பொழுது ஒவ்வொருவரும் தமதிஷ்டம்போல் தமது சுருதியை எழுதிக்கொண்ட தாகத் தெரிகிறது. அவர்களுக்கு விஷய ஆதாரம் ஏதாகிலும் இருக்குமேயாகில், ஒவ்வொருவரும் சிருட்டி சித்தாந்தத்தை ஒரு விதமாகவே வளர்த்து வந்திருப் பார்கள். யாருக்கும் எந்தவிதமாக உலகம் வந்திருக்கு மென்று உண்மையாகத் தெரியாதபடியால், மனம்போன வாறு உத்தேசித்து வந்தார்கள். இதனால்தான், ஒரு சுருதி மற்றொரு சுருதிக்கு மாறுபட்டு எழுதப்பட்டிருக்கிறது. இந்த சுருதிகள் ஒரு காலத்தில் ஒருவரால் எழுதப்பட்ட வைகளல்ல. அந்தந்தக் காலங்களில் யார் யார் சிருட்டியைப்பற்றி யோசிக்கத் தொடங்கினார்களோ அவரவர்கள் மனம் போனபடி உத்தேசித்து எழுதி வைத்தார்கள். அவரவர்களுக்கு ஆதரவு அவரவர்களுடைய மனமே. "மனத்தினால் எண்ணித்தானே வந்தது இவ்வுலகம்" என்றார் ஒருவர். "வெளிச்சம் உண்டாகுக என்றபோது உலகம் உண்டாகியது" என்றார் மற்றொருவர். "சில தெய்வ கணங்கள் ஆகாய மார்க்கமாக விதை விதைத்துக் கொண்டு போகையில் அவ்விதைகள் உலகங்களாகவும், நட்சத்திரங்களாகவும் முளைத்தன" வென்று சிந்தித்தார் இன்னொருவர். இவ்விதமாக சிருட்டிக் கதைகளைக் கட்டி, அதற்கு வேண்டிய சொற்பொழிவுகளை அமைத்து வேதங்களெனவும், சுருதிகளெனவும், புராணங்களெனவும் பெயரிட்டு, பாமர உலகம் அவைகளை நம்பி நடக்கும்படி சூழ்ச்சிகள் செய்துள்ளனர்.

ஒவ்வொரு புராணக் கதையும் இவ்வாறே கற்பிக்கப் பட்டன. சிற்சில கிராமாந்தரங்களில் ஆதிகாலங்களில் வழங்கி வந்திருந்த ஊர்க்கதைகளையும், ஜாதி கதை களையும் (Folk Tales) கூட்டி, புராணமெனப் பெயரிட்டு,

"பார்வதிக்கு பரமசிவன் சொன்னார். அதைக் கேட்டிருந்த ஜனந்தனர் ஜனார்த்தனருக்குச் சொன்னார்" என்று மழலைக் கதைகளைக் கட்டி, பொது ஜனங்களின் மூட பக்தியை வளர்க்கச் செய்து, அதன் பயனாகக் கோயில் களையும், குளங்களையும், கோபுரங்களையும் கோடானு கோடி மக்களைக் கொண்டு கட்டுவித்து, நாளைக்கும் நமது நாட்டு ஜனசமூகங்கள், இக் கட்டுக் கதைகளை உண்மை என நம்பும்படி செய்து வாழ்க்கை முழுமையும் பயம் நிறையச் செய்துள்ளார்கள்.

இந்தப் பயம் குழந்தைப் பருவத்திலேயே ஆரம்பிப் பதைப் பார்க்கலாம். அதாவது "பூதமிருக்கின்றது, பேயிருக்கின்றது" என்று பயத்தைக் குழந்தைகளுக்கு முதல் முதல் ஆரம்பிக்கின்றார்கள். அதன் பிறகு அய்ந்து கண்ணனை சிருட்டித்து, குழந்தைகளை மிரட்டி வருகிறார்கள். பிறகு புலி, கரடி, சிங்கம் விழுங்கி விடு மென்று குழந்தைகளை அதட்டுகிறார்கள். "கடவுளைத் தொழு; இல்லாவிடில் அவர் தண்டிப்பார்" என்றும், "நரகமென்று ஒன்றுள்ளது அதில் கொண்டுபோய் போடுவார்கள்" என்றும், கட்டுக்கதைகள் மூலமாகவே மனித குலத்தைப் பயப்படச் செய்து வருகின்றனர். இவ்வித பயத்தில் வளர்ந்து வந்த சிறுவர், சிறுமிகள் வாழ்வு முழுமையும் பயந்தே எதையும் விசாரித்துணராமல் மூட நம்பிக்கைகளில் ஆழ்ந்து, சஞ்சலத்திலேயே காலம் கழித்து வருகின்றனர். கடவுள் பயமும், நரக பயமும், காட்டேரி முனீஸ்வரன் பயமும், மாரியம்மன் பயமும், இன்னும் பற்பல பயங்களும் நமது தொட்டில் பழக்கங்கள் என அறிக. மதங்களின் ஆபாசங்களையும், புராண பித்தலாட் டங்களையும் தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டி வந்தும் உலகம் பொய் நம்பிக்கைகளிலும், மூட பக்திகளிலும் ஆழ்ந்திருப்பதற்கு நமது தொட்டில் பழக்கங்களே காரணமென்பதில் சிறிதும் அய்யம் இல்லையென்று அறிக.

## மூன்றாம் அத்தியாயம்

# கடவுள் என்றால் என்ன?

முந்திய இரண்டு அத்தியாயங்களில் பிரபஞ்சத்தில் கடவுளுக்கு இடமுண்டா? என்ற சங்கைக்கு ஓர் சுருக்க மான விடையும், கடவுளென்ற பதத்திற்கு தத்துவ விவேகி யரும், மதத்தவரும், பக்தர்களும் என்ன அர்த்தத்தைக் குறிக்கின்றார்கள் என்பதையும் சற்று விவரமாக எடுத் துரைத்தோம். இந்த அத்தியாயத்தில் "கடவுளென்றால் என்ன?" என்று விஞ்ஞான முகத்தே விசாரித்தறிவோம்.

ஆப்ரகடாப்ரா (Abracadabra), அல்லது காடலாப்ரா (Cadalabra) என்று ஆங்கில பாஷையில் சொல்லும் இரண்டு வார்த்தைகள் உள. இந்த இரண்டு சொற்களைப் போன்றதே கடவுள் என்ற பதமுமென அறிக. அதாவது எந்தப் பொருளையும் குறிக்காது, வெறுஞ் சொல்லாக முடியும் சொற்களில் கடவுள் என்ற சொல்லும் ஒன்று என்பதாகும்.

உலகில் மனிதன் தோன்றுவதற்கு முந்தி, பல சீவன் கள், புல் பூண்டு, செடி, விருட்சம், புழு, மீன், ஊர்வன, பறப்பன, நடப்பன, முதலிய பிராணிகளும், பலகோடி காலம் வாழ்ந்துவந்தன. இதனை விவரமாக இனிவரும் அத்தியாயங்களில் எழுதுவோம். தற்போது நாம் கவனிக்க வேண்டியதென்னவெனில், தற்போது வாழும் தாவரங் களும் பிராணிகளும் மனிதர்களுக்கு முந்தி வாழ்ந்த தாவரம், பிராணி வகையறாக்களின், சந்ததிகளாதலால் இவைகளில் கடவுளென்ற பதம் கிடையா. பலகோடி பிராணிகள் சத்தமிடுவதைக் கேட்டு வருகின்றோம். அவற்றுள் ஒரு பிராணியாகிலும் கடவுளென்ற பதத்தை உச்சரிப்பதைக் கேட்டிலோம். ஆனால், மனிதன் ஒருவன் தான் கடவுளென்ற பதத்தைச் சொல்லுகின்றான். அவன் சமூகத்திலும், பிறந்த குழந்தைகள் கடவுள் என்ற பதத்தைச் சொல்வதாகவும் காணோம்.

குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தாலொழிய, அவை, கடவுளென்ற வார்த்தையைச் சொல்லா. நாம் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுக்கும் சொற்களில், கடவுளென்ற பதமும் ஒன்று. ஆனால், கடவுளென்ற பதத்திற்கும், மற்ற பதங்களுக்கும் ஒரு வித்தியாசமுண்டு. அதாவது மற்ற பதங்கள், ஏதாகிலும் பொருளைக்காட்டிக் கற்பிக்கப்படும் சொற்கள். கடவுளென்ற பதமோ, பழக்கச் சொல்லேயொழிய, பொருளைக் காட்டிக் கற்றுக் கொடுத்த சொல்லாகாது. வீட்டிலும் கோயில்களிலும், முதியோர் படங்களைக் கொண்டும், விக்கிரகங்களைக் கொண்டும், "கடவுளே" என்று வணங்குங் காலங்களிலும், மத நூல்களை வாசிக்கும் காலையிலும், கஷ்ட காலங்களி லும் "கடவுளே" என்று அழைக்கும்போதும், இவர்கள் காதில் விழுஞ்சொற்களில் இதுவொன்றாகும். சிறு வயதிலேயே இந்த வார்த்தையை அடிக்கடி உபயோகப் படுத்தும் பழக்கமாகிவிட்டபடியால், அதுவே வழக்கமாகி விட்டது. இதனை விசாரிப்பதும் கிடையாது. கடவுளென் றால் என்னவென்று சில குழந்தைகள் கேட்கின்றன. "உனக்குத் தெரியாது. பெரியவனாகிவிட்டபோது உனக்குத் தெரியு"மென்று தாய் தகப்பன்மாரும், புரோகிதர் முதலியோரும் சொல்லிவிடுகின்றார்கள். பெரியோர்கள் கல்லை வணங்கும்போதும் குழந்தைகளும் கூடவே வணங்குகின்றன. கற்சிலைகளுக்குத் தூபதீப நைவேதனம் செய்யும்போதும், குழந்தைகளும் செய்கின்றன. "அரகரா" என்று தாய் தகப்பன்மார்கள் சொல்லும் போதும் அவைகளும் கிளிப்பிள்ளைளைப் போல "அரகரா" என்று சொல்லுகின்றன. குழந்தைப் பருவத்தில், எதைச் சொல்லச் சொன்னாலும் சொல்லுகிறோம். அந்தக் காலங்களில், சொல்லிக்கொடுத்த பதங்களில் "கடவுள்" என்ற பதம் அடுத்தடுத்து சொல்லப்படுகின்ற படியால், இந்தப் பதம் வாயில் அழுத்தமாய்ப் பழகிவிடு கின்றது. தொட்டில் பழக்க வாசனையாலேயே கடவு

ளென்ற பதம் தொண்டையில் தடித்துவிட்டது. அக்கால முதல், பல வருடங்களாக, நமக்குள் தடிப்பேறிய நிமித்தத் தால்தான், "கடவுள்" என்ற சொல்லுக்குள்ள மகத்துவ மெல்லாம் இருக்கின்றதென அறிக.

மனிதனுக்குப் பழக்கமே விசேஷம், தெய்வமென்று சொல்வதும் பழக்கம். அந்த வார்த்தையைக் கேட்டு வணங்குவதும் பழக்கம். தூபதீபங்கள் ஏத்துவதும் பழக்கம். தெய்வங்களுக்கென கோயில், குளங்கள் கட்டுவதும் பழக்கமேயாகும்.

மதங்களில் அபிமானமுள்ளவர்கள் இந்தப் பழக்க வாசனையால் "கடவுள்" என்ற பதம் எதைக் குறிக்கின்றது என்று விசாரிப்பதுமில்லை. அந்த வார்த்தையை விசாரிக்கப் புகுந்தவர்களை "நாத்திகர்" "சண்டாளர்" என்று ஏளனம் செய்கின்றார்கள். பக்தர்களில் சிலர், விவேகிகளாயிருக் கின்றவர் "சந்தேகி" என்று கண்டிக்கின்றார்கள். பழக்க வார்த்தையை எவ்விதம் மறுப்பதென்று, மதத்தவர்கள் பயப்படுவதாகத் தெரிகிறது.

"கடவுள்" என்ற இந்தப் பதம், நாம் பேசும் எல்லா வார்த்தைகளைப் பார்க்கிலும் அதிக வைராக்கியம் பெற் றுள்ளது. மத வைராக்கியமென்பதும் இந்தப் பதத்தைக் குறித்ததே. இந்த வார்த்தையைப் பற்றி எழுதாத நூல் களில்லை; தர்க்கிக்காத வார்த்தைகளில்லை; தத்துவம் பேசாத பேச்சுகளில்லை; இந்தச் சொல்லைக் குறித்து அடைந்திராத மூட பக்தியில்லை. இவ்வளவு மகத்துவம் கொண்டது இந்தப் பதம். இதற்குக் காரணமுண்டு. முதலா வது இந்தச் சொல், பண்டைக் காலத்துப் பழக்கச் சொல். இரண்டாவது, இந்தச் சொல்லைச் சொல்லிக்கொண்டு பிழைக்கின்றவர்கள் அனந்தம். இந்தச் சொல்லுக்காக அநேக ஸ்தாபனங்கள் உண்டாகியிருக்கின்றன. இந்த ஸ்தாபன மூலமாக, பலருக்கு சீவனமுண்டு. இவ்வித காரணங்களால் இந்தச் சொல்லே இன்னும் நிலைத்து

வருகின்றது. இந்தச் சொல் புராதன சொற்களில் ஒன்றென மேலே குறித்துள்ளோம். இதன் உற்பத்தியைக் குறித்து சற்று ஆராய்வோம்.

"கடவுள்" என்ற வார்த்தை இல்லாத சில மனிதர்கள் இருப்பதாகச் சொல்லுகின்றார்கள். அப்படி இருந்தாலும் இருக்கட்டும். ஆனால், மனிதனுக்குக் கீழாய் உள்ள சீவராசிகளிலும் மனிதக் குழந்தைகளிலும் இந்த வார்த்தை இயல்பாக வழங்குவதாக இல்லை. இது கண்கண்ட விஷயம். ஆனால், நாகரிகமடைந்துள்ள சமூகங்களிலும் இந்தச் சொல் பழக்கத்தில் இருப்பதைக் காணலாம். ஒன்றையும் குறிப்பாகக் காட்டாத இந்தச் சொல் எவ்விதம் உற்பத்தியாகியிருக்கும்? இந்தச் சொல் இரண்டு விதமாக மனித வர்க்கத்தில் தோன்றியிருக்கலா மென்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

நமக்கு முந்தி வாழ்ந்து வந்த நம்முடைய மூதாதைகள், சுமார் 5,6 லட்சம் வருடங்களுக்கு முன், காட்டு மிராண்டி களாக இருந்து வந்தனர். இது கட்டுக் கதையல்ல. விசாரணையில் ஏற்படும் முடிவு என அறிக. நம் முன்னோர் உலகில் வாழுங்காலை, உபயோகித்து வந்த பொருள்கள் ஆடை, ஆபரணம், கற்சட்டி, படகு, குகை முதலிய வாசஸ்தலங்களை இற்றைக்கும் காணலாம். இன்னும் பல ஆதாரங்களைக் கொண்டு நம் முன்னோர் அடைந்திருந்த சமூக வாழ்க்கையை அறிந்துகொள்ளலாம். அந்தக் காலத்தில் விஷய வார்த்தைகளுக்கும், கற்பித்த வார்த்தை களுக்குமுள்ள வித்தியாசத்தை மனிதன் அறியாதவனா யிருந்தான். அவன் காணும் கனவு உண்மையெனத் தோன் றும். தண்ணீரில் தன் முகத்தைப் பார்த்தால் தானும் அங்கே இருப்பதாக எண்ணுவான். மூர்ச்சையாக இருப்பவன் விழித்துக்கொண்டதும், அவனிடமிருந்து ஏதோ ஒன்று வெளிப்பட்டிருக்கவேண்டுமென்று தீர்மானிப்பான். கனவில் ஆடும் வேட்டையும், பிடிக்கும் மீனும், போடும் சண்டைகளும் உண்மையென்றே எண்ணு

வான். இத்தியாதி அனுபவங்களிலிருந்து, தனக்குள் ஒரு தனிப் பொருள் உள்ளதெனத் தீர்மானிப்பான். அதேமாதிரி தன்னுடைய தேக அசைவை அனுபோகத்திலிருந்து தேகமன்னியில் வேறு ஒரு வஸ்து இருந்து கொண்டு ஆட்டுவதாக அனுமானித்ததுபோல், தனக்குள் அன்னியப் பொருள்கள் அசைவைக் கண்டு, அவைகளையும் ஆட்டுவிப்போன் ஒருவன் உள்ளதாகத் தீர்மானிப்பது எளிதாகும். இடி, மின்னல், வெள்ளம், புயல், நில நடுக்கம் முதலிய கொடூர சம்பவங்கள் தனக்குக் கெடுதி விளைவிப்பதைக் கண்டு அவைகளும் கடூர கர்த்தாக்களால் உண்டாக்கப்பட்டிருக்க வேண்டுமென்று தீர்மானித்தான். மனிதவர்க்கம் குழந்தைப் பருவத்திலிருந்தபோது, இம் மாதிரியாக நிகழும் சம்பவங்களுக்குத் தனிக் கர்த்தா பலரோ, ஒருவனோ இருக்க வேண்டுமென்று எண்ணுவது சுலபமே. இவ் விதமாகப் பொருளற்ற வார்த்தைகள் உண்டாயின. 33 கோடி தேவர்களும், நொண்டி, சண்டி, சாமுண்டிகளும், பேய்பிசாசுகளும், சிவன், விஷ்ணு, பிரமன், அல்லா, ஜூஹோவா, கடவுள், பிரமம் என்ற பதங்களும் உண்டாகியன. இஃதோர் யூகை.

காட்டுமிராண்டி யுகத்தில், மனிதச் செயலுக்கும், பிரகிருத செயல்களுக்கும் வித்தியாசத்தைக் கண்டுபிடிப்பது மிகக் கஷ்டம். தான் எவ்விதம் உயிருள்ளவனாக எண்ணினானோ, அவ்விதமே தனக்கு அன்னியில் நிகழும் சம்பவங்களுக்கும் உயிர் கொடுத்தான். கொடூர குணங்களைக் காரணகர்த்தா வாக்கினான் - நன்மையான சம்பவங்களுக்குத் தன்னுடைய நற்குணங்களைக் காட்டினான். இடி இடித்துத் தன் குடிசை நாசமானால், இடிராசனுக்குத் தன்மேல் கோப மூண்டதாக எண்ணிப் பயந்து வணங்கினான். பூசை நைவேத்தியமிட்டுத் தாள் பணிந்தான். இன்றைக்கும் சில காட்டுமிராண்டிகள், இடியைக் கேட்டால் கீழே விழுந்து கும்பிடுகிறார்கள். நம்மில் பலரும் இடி முழக்கத்தைக் கேட்டதும் “அர்ச்சுனா” என்று

கூப்பாடு இடுகின்றார்கள், குழந்தைகளும் நடுங்குகின்றன. அதைப் போலவே நம் முன்னோர்கள் தங்கள் புறத்தில் நடக்கும் சம்பவங்களுக்கெல்லாம் ஒரு கர்த்தாவைக் கற்பித்துக் கொண்டு, நல்ல சம்பவமாய் இருந்தால் அதற்கு நல்ல தெய்வமெனவும், அன்புடைய கடவுளென்றும் கற்பனை செய்தார்கள். கெட்ட சம்பவங்களுக்குக் கோபமுள்ள தெய்வமென்றும், கடூர தெய்வமென்றும் கற்பனை செய்தார்கள். அன்புடைய கடவுளை வாழ்த்திப் போற்றுகின்றார்கள். கடூரக் கடவுளுக்குக் காவு, பலி முதலியவை இடுகிறார்கள். இது இரண்டாவது யுக்தி. இவ்விதங் களால், ஆதியில் கடவுள் என்ற சொல் கற்பிக்கப்பட்டு வந்திருக்கலாம்.

உலகில் பேசும் பிராணி மனிதன் ஒருவனே. இந்தப் பேச்சால் மனிதன் இரண்டு உலகங்கள் படைத்துக் கொண்டான். தான் பார்க்கும் உலகமொன்று; தான் பேசும் உலகமொன்று. பார்க்கும் உலகம் நேர்முகவுலகம்; பேசும் உலகம் மறைமுகவுலகம். இந்த உள்முகவுலகம் இரண்டு வகைத்து, காணும் பொருளைக் குறிக்கும் உலகமொன்று. பொருளற்ற கற்பனைஉலகம் மற்றொன்று. இந்தக் கற்பனையுலகத்தைச் சேர்ந்தவை கடவுள், தெய்வம், பூதப்பிசாசுகள், நரகம், மோட்சம், நிர்வாணம், பரமண்டலம், பரமபதம், சூட்சுமலோகம், சத்து, சித்து, ஆனந்தம் முதலியன.

காரணமொன்று இருக்க இதனையறியாமல் கற்பித்த வார்த்தைகளைக் கற்பித்துக்கொண்டு, அவைகளுக்குக், கோயில், குளங்கள், பூசை, நைவேத்தியம், பிரார்த்தனை, தொழுதல் முதலிய மூடப் ப்ழக்கங்களைச் செய்து கொண்டு, இன்றும் உலகம் மூடநம்பிக்கையில் ஆழ்ந்து கிடப்பதை நோக்கில், மனித உலகம் இன்னும் குழந்தைப் பருவத்தில்தான் ஆழ்ந்துகிடக்கின்றதென்பதற்குச் சந்தேகம் வேண்டுமா?

### நான்காம் அத்தியாயம்

# கடவுள் செய்யும் வேலைதான் என்ன?

முன் அத்தியாயங்களில் கடவுள் ஒருவர் இருந்தால், அவர் தங்குமிடம் பிரபஞ்சத்தில் உள்ளதா என விசாரித்தோம். நமக்குத் தெரிந்தவரையில் பிரபஞ்சத்தில் கடவுளுக்கு இடமிருப்பதாக ஏற்படவில்லை. கடவுளின் லட்சணங்கள் நமக்கு விளங்குகின்றதா என்பதை விசாரித் தோம்; அதுவும் நமக்குத் திருப்திகரமாக எதுவும் விளங்க வில்லை. பிறகு பக்தர்களும் சமயவாதிகளும் தத்துவ நூல் ஆசிரியர்களும் தங்கள் குழந்தைப் பருவத்தில் கேட்டுவந்த சொல்லாகிய 'கடவுளை' இன்னதென்று பொருள் தெரியாமலே நம்பி வருகின்றனர் எனவும் காண்பித்தோம். கடவுள் என்ற பதத்தின் ஆதாரத்தையும் சுருக்கமாகக் குறிப்பிட்டோம். இனி கடவுள் என்ற ஒருவர் இருப் பாராயின், அவரது வேலை என்ன என்பதைச் சற்று விசாரிப்போம்.

கடவுள், அல்லது கடவுளர் வேலை என்ன? புராணங்களில் கடவுள் சிவனாகவோ, விஷ்ணுவாகவோ அவதரித்துச் சிற்சில கிர்த்தியங்களைச் செய்ததாகச் சொல்லப்படுகிறது. இதை அறிஞர் உலகம் நம்புவதற்கு இடமில்லை. சிவன், பிரமன், விஷ்ணு செய்ததாகச் சொல்லுங் காரியங்கள் தற்கால மனிதருக்கு அருவருப் பைத் தரத்தக்கவை என்றே மதிக்கவேண்டும். சில மதங் களில் கடவுளுடைய அருள்பெற்று சிலமனிதர்கள் அபூர்வச்செய்கைகள் செய்ததாகச் சொல்லுவதும் உண்டு. கிறித்தவ ஆகமத்திலும் மகம்மதிய ஆகமத்திலும் கிறித் துவும், மகம்மதுவும் கடவுளருள் பெற்றவர்களென்று சொல்லப்படுகின்றது. ஆனால், மற்ற மனிதர்கள் செய்து

வரும் வேலைகளைவிட இவர்கள் செய்ததாகச் சொல்லப் படும் காரியங்கள் விசேஷமாகத் தோன்றவில்லை. அந்தக் காலங்களில் தோன்றிய இயேசுவும், மகம்மதுவும், சிவன், விஷ்ணு, பிரமனும் துக்கம் நிறைந்த நமது காலத்தில் தோன்றலாகாதா? அந்தக் காலத்தில் இருந்த அவசரம் இந்தக் காலத்தில் இல்லையா? புண்ணிய காலத்தில் தோன்றிய கடவுளரும், தீர்க்கதரிசிகளும், பாவம் நிறைந்துள்ள நமது உலகில் ஏன் தோன்றலாகாது? இதற்கு விடையாதெனில், அக் காலங்களில் கடவுளர் உலகில் அவதரித்ததாகச் சொல்லும் கதைகளும், அவர்கள் செய்த தாகச் சொல்லும் கிர்த்தியங்களும் பொய் என்பதற்குச் சந்தேகமில்லை. மூட நம்பிக்கைக் காலங்களில்தான் கடவுளர் திருவிளையாடல்கள் யாவும் எழுதப்படுகின்றன. விசாரணை மேலிட்ட காலங்களில் எந்தக் "கந்த புராணங் களும்" வெளிவர அச்சப்படும். பாமர ஜனங்கள்கூட பழைய புராணக் கதைகளை நம்பினாலும் நமது காலங் களில் புதிய புராணங்கள் எழுதப்படுமேயாகில், அவைகள் நகைப்புக்கு இடமுண்டாகும். இது புராணிகர்களுக்கு நன்றாகத் தெரியும். இது காரணமாகவே புதிய 'கந்த புராணங்கள்' எழுத அச்சப்படுகின்றார்கள். திருவிளை யாடல் முதலிய புராணங்கள் யாவும், பார்ஸி கதையைப் போன்றனவும், அராபிக் கதைகளைப் போன்றனவும், பஞ்ச தந்திரக் கதைகளைப் போன்றனவுமான சாகித்தியங்கள். அதாவது இலக்கியங்கள் என அறியவேண்டும். இவைகள் கூறும் விஷயங்கள் உண்மையென யாருங் கருதார். ஆனால், இவை கூறும் கூற்றினை நமது நாட்டில்தான் மத விஷயமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இது மிகவும் வருந்தத்தக்கதே. பாமர ஜனங்கள் தங்கள் பகுத்தறிவை உபயோகிக்கும் பட்சத்தில் புராணங்களின் ஆபாசங்கள் தெள்ளென விளங்கும். இதனை எடுத்துக்காட்டி, பல கோடி மனிதரை மூட பக்தியினின்று மீட்கவேண்டிய கடமை அறிஞருடையதே. இதனை எடுத்துரைப்பாரை,

நாத்திகர்களென்றும், கடவுள் இல்லா பாவிகள் என்றும் கூறுவதில் பிரயோஜனமில்லை. "சொல்லுவதில் நியாயமுளதா" என விசாரித்தல் வேண்டும். இதுதான் உத்தமருக்கழகு. புராணங்கள் கூறும் கடவுளுடைய திருவிளையாடல்கள் யாவும் கழைக்கூத்தை போன்றவை களென்றால், கடவுளுக்கு என்னதான் வேலை? சிருட்டி என்பார்கள் பக்தர்கள். அவர்களில் சைவர்கள் சொல்வ தாவது; ஆன்மா அனாதியாக கர்மத்தில் தோய்த்திருந் ததை சிவன் ஆன்மாவுக்குத் தனு, கரண, புவன போகத் தைத் தனது கருணையால் அருளி, ஆன்மா பாசத்தி லிருந்து விடுபட பக்தி மார்க்கத்தை உணர்த்தியதாகச் சொல்லுகின்றார்கள். இது முழுமையும் கற்பிதமென்று எண்ண வேண்டிவருகிறது. ஆன்மா என்பதே கற்பிதம், இதனைக் கற்பித்ததுக்கொண்டு அனாதியாகப் பாசத்தில் ஆழ்ந்து கிடந்ததை எடுத்துத் தூக்கிவிட, தேகம், உலகம் முதலியவற்றைச் சிருட்டி செய்தாராம். கடவுளுடன் அனாதியாக இருந்த ஒன்றை மீட்டார் என்பதும் முரணே. எப்படியெனில், அனாதியென்றால் காலா தீதமாகும். காலத்திற்கு மீறியதை எப்படி மீட்பதாகச் சொல்லுவது?

இது நிற்க, சர்வ சக்தியுள்ள கடவுள் ஆன்மாவோடு அனாதியாகவே இருந்ததாகச் சொல்லுகின்றார்கள். இரண்டும் அனாதி என்றால் ஒன்று மற்றொன்றை சிருட்டிப் பது எப்படி? தனு, கரண, புவன, போகத்தைக் கடவுள் சீவனுக்கு அளித்தாரென்றால் எவ்விதம் அளித்தார்? கை, கால், முகம், தலை முதலிய தேக உறுப்பு கள் எங்கிருந்தோ ஓடி வந்தனவா? அல்லது பிள்ளை யாரைப்பிடித்து வைப்பதுபோல் ஈசன் நம்மைப் பிடித்து வைத்தாரா? நம்முடைய அனுபவமெல்லாம் சீவனெனப் படுவோர் யாவரும் சிறு வித்திலிருந்து படிப் படியாக உருவங்களைப் பெறும் காட்சியே. ஆதலின் கடவுள் முதலில் வித்தைப் படைத்தாரா? அல்லது சீவர் உருவங் களைப் படைத்தாரா? சைவர் சொல்லும் ஆபாசம்

ஒருபக்கம் இருக்க, வேதாந்திகள் என்ன சொல்லு கிறார்கள் என்று பார்ப்போம். "சத்தம், அதாவது சொல்லி லிருந்து சோதி வந்ததாம்; சோதியிலிருந்து ஆகாயம் வந்ததாம். அதிலிருந்து தீ, தண்ணீர், மண் முதலிய தத்து வங்கள் உண்டாயினவாம்! வேதாந்திகளுக்கு மனிதனும், மற்றுமுள்ள சீவர்களும் சிருட்டிக்கப்பட்டதாகச் சைவர் சொல்லுவது உடன்பாடில்லை. வேதாந்திகள் பிரமத்தி லிருந்து உலகமும், உயிரும், பரிணமித்தனவென்பர் - பரிணமித்தல் என்றால் ஒன்றிலிருந்து இயற்கையாகவே மாறுதல். ஆதலின் இயற்கையாகவே மாறும் பொருள் களுக்கு கடவுள் உதவி ஏன் வேண்டும்? இத்தியாதி சிருட்டிக் கதைகளிலிருந்து கடவுளுடைய பக்தர்களுக்கே கடவுள் இன்ன வேலை செய்கின்றார் என்று திட்டமாகச் சொல்ல முடியவில்லை என்றே ஏற்படுகின்றது. இவ்விதமான சிருட்டிக் கதைகளுக்குக் கணக்கு வழக் கில்லை. ஒரு மதத்தர் சொல்லும் கதைக்குப் பொருத்தமோ சம்பந்தமோ கிடையாது. ஒரு மதத்தர் முட்டையி லிருந்து வந்தது உலகமும், உயிரும் என்பார்; வேறொரு மதத்தர் பிரமன் தலையிலிருந்தும், முகத்திலிருந்தும், வயிற்றி லிருந்தும், கால்களிலிருந்தும் நான்கு வர்ணத்தார்களாகிய பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, "சூத்திரர்கள்" பிறந்த தாகச் சொல்லுகிறார்கள். "எதா பக்தா ததா தேவா." அதாவது பக்தன் எப்படியோ அப்படியே கடவுளும் என்ற வாக்கியப்படி, அந்தந்தப் பக்தனுக்குத் தோன்றியவாறு கடவுளுடைய வேலையைக் கற்பிக்கிறார்களேயொழிய, கண்டதாக யாரும் சொல்லவில்லை. கடவுளும், கடவுள் செய்ததாகச் சொல்லும் கிர்த்தியங்களும் காவியக் கற்பனைகளென்று காட்ட (Poetic Creation) சில சிருட்டிக் கதைகளை இங்கு உதாரணமாகக் காட்டுவோம்.

சிகப்பு இந்தியர் (Red Indians) சொல்லும் கதை வினோதமாக இருக்கும். பூமி ஒரு காலத்தில் மூடுபனியால் மூடப்பட்டிருந்தது. பெரிய ஆவி, அதாவது கடவுள்

தன்னுடைய அம்புவில்லால் அவைகளைப் பிரித்தார். களிமண்ணை எடுத்து மனித உருவமாக்கி அனலில் வேக வைத்தார். சுடுகை போதாமையால் ஒரு மண்மனிதன் வெளுப்பாய் வந்தான். அதிக சூட்டினால் ஒரு மண்மனிதன் கருப்பாய் வந்தான். அனலும் குளிர்ச்சியும் சேர்ந்து மிதத்தில் வேகவைத்த மண்மனிதன் சிகப்பாய் வந்தானாம்! அவன்தான் மனிதருக்குள் உத்தம புருஷனாம்! அமெரிக்கா தேசத்து இந்தியர் சிவப்பாய் இருப்பார் களென்பதை இக் கதையின் சந்தர்ப்பத்தில் கவனிக்கத் தக்கது. தென் அமெரிக்கர்கள்தங்கள் கடவுளாகிய ஒரு நட்சத்திரக் கணத்திலிருந்து தாங்கள் வந்ததாகவும், இந்த தாராகணம் மறைவுள்ள காலத்தில் தங்கள் பிதாவாகிய கடவுள் நோயால் வேறுபடாமல் இருப்பதாகவும் சொல்லுகின்றார்கள்.

கால்மூக்ஸ் (Calmucks) என்ற கூட்டத்தாரின் ஆதி மனிதன் பிரகாசிக்கும் முகத்தையுடையவனாய் இறக்கை களுடன் பறந்து கொண்டிருந்தானாம்! ஆனால், கடவுள் கட்டளைக்கு மாறாக நடந்தபடியால் இறக்கை கழன்று உலகில் நடக்க ஆரம்பித்தானாம்!

செமுநோய் (Semunoi) இந்தியர் வேடிக்கையான கதை ஒன்றைச் சொல்லுகிறார்கள். கடவுள் உலகத்தைப் படைத்து, மூன்று அழகிய மனிதனைச் செய்து, அவர் களை ஒரு குளத்தில் குளிக்கச் சொன்னாராம். சுத்தமான தண்ணீரில் குளித்தவன் வெளுப்பாகவும், அழுக்குத் தண்ணீரில் குளித்தவன் கருப்பாகவும், அழுக்கும் சுத்தமும் இல்லாத தண்ணீரில் குளித்தவன் சிவப்பாகவும் ஆனார் களாம். அவர்கள் முன்பாக மூன்று பெட்டிகளை வைத்துத் திறக்கச் சொல்லவும் முதலில் திறந்தவனுக்கு அம்பும் வில்லும், இரண்டாவது திறந்தவனுக்கு உளியும் சம்மட்டியும், மூன்றாவது திறந்தவனுக்குக் காகிதமும் பேனாவும் கிடைத்தனவாம். அதுமுதல் அந்தந்த தொழி லாளிகள் உற்பத்தியானார்களாம்.

சீனர்கள் சொல்லும் கதை வேடிக்கையாக இருக்கும். ஒரு பெரிய முட்டையிலிருந்து தங்கள் கடவுள் உற்பத்தி யானார். அவர் பெயர் பூன் கூவாங். முட்டையின் மேல் பாகம் வானமாகவும், அடிப்பாகம் பூமியாகவும் ஆயிற்றாம். கடவுள் தனது வலது கையால் சூரியனையும் இடது கையால் சந்திரனையும் நட்சத்திரங்களையும் சிருட்டி செய்தாராம். அதன் பிறகு அய்ம்பூதங்களையும் (அப்பு, பிருதிவு, தேயு, வாயு, ஆகாயம்) படைத்து இரண்டு மேகங்களை எழுப்பி, பொன்னிலிருந்து எழுந்த மேகத்தை ஆணுருவமாக்கியும், கட்டையிலிருந்து எழுந்த மேகத்தைப் பெண்ணுருவமாக்கியும், இவ்விரண்டு உருவங்களின் சையோகத்தால் ஏற்பட்டது ஆணும் பெண்ணுமாம்! பிறகு இவ்விருவரிலிருந்து மனித சந்ததி உற்பத்தியாயிற் றாம். இதைப்போன்ற வினோத வேடிக்கை சிருட்டிக் கதை ஒன்றைக் கிறித்தவப் பாதிரிமார் சொல்லுகின்றார்கள். களிமண்ணைக்கொண்டு மனிதனையும், அவன் பக்க எலும்பைக்கொண்டு பெண்ணையும் செய்து, அவர்கள் மூக்கில் தேவன் தனது காற்றை ஊதி உயிர்ப்பித்தார் எனவும் சொல்லுகின்றார்கள். இது ஓர் ஜாலவித்தையாக எண்ணவேண்டி வருகிறதே யொழிய, பராபர வஸ்துவின் காரியமென்று எண்ண முடியவில்லை.

கால்டியன் (Chaldean), அஸ்ஸீரியன் (Assyrian) கூட்டத்தார், ஆதி நாகரிகத்தை அடைந்தவர்களில் இருவர். இவர்கள் சுமார் 50,000 வருடங்களுக்கு முந்தி வாழ்ந்தார்கள். இவர்களின் கடவுள், பற்பல ஆபாசத் தொல்லைகளைச் செய்து வந்ததாகச் சொல்லப்பட்டிருக் கிறது. இவைகளை இவ்விடத்தில் வரைவது அனாவசியம். இந்தக் கதைகள் யாவும், சைவர்கள் சொல்லும் கதைகளாகிய தங்கள் சிவனார், சூரியனை உதைத்தார்; சந்திரனின் பல்லைப் பிடுங்கினார் என்பதையொக்கும்.

சகல மதத்தவர்களும், கடவுளுக்குச் சிருட்டி செய்யும் வேலையைத் தவிர, மற்ற வேலை எதுவும் செய்வதில்லை

என்று கருதினார்கள் போலும். ஏனெனில், வேதங்களும், புராணங்களும், சிருட்டியைக் குறித்தே முக்கியமாகப் பேசுகின்றன. விவிலிய நூலிலும், நமது திருவிளையாடல் புராணத்திலும், சிருட்டி செய்தபிறகும் சில ஆண்டுகளாக, தங்கள் கடவுள், மனிதருடன் கூடி விளையாடி வந்ததாகத் தெரிகிறது. இதனை எழுதியுள்ள புத்தக ஆசிரியர்கள் தங்கள் கடவுளை மனித உருவத்தைப் பெறச் செய்தாகிலும், அல்லது அசரீரி வாக்கு முதலிய மறைந்த ஆதாரங்களாலும் இவ்வுலகில் தங்கள் கடவுள் வேலை செய்து வந்ததாகச் சொல்லுகின்றார்கள். கடவுள் பகுத்தறிவு இல்லாதாரிடம் அக் காலங்களில் காட்டிய மகத்துவங்களைத் தற்கால அறிஞர்கள்முன் காட்டி, அவர்களைத் தான் இருப்பது உண்மை என நம்பச் செய்யலாகாதா? இந்த விஷயமாகச் செய்துவரும் ஆராய்ச்சிகளில் கடவுள் ஒருவரோ, பலரோ இருப்பார்களேயானால் தாம் இருக்கும் விஷயத்தை மாத்திரம், தற்கால அறிஞர் முன் காட்டியிருப்பார்கள். மதத்தவர்கள் கூறும் கடவுளர் இல்லாமையால் தான் அவர்களுடைய வேலையை இன்னதென்று சொல்ல முடியவில்லை என்று யூகிக்க வேண்டிவருகின்றது. இதன் சம்பந்தமாக இன்னொரு கேள்வியுமுண்டு. சிருட்டி ஒன்றைத்தானோ செய்தார்? சிருட்டி செய்வித்து அதன் பிறகு மனிதர்களுக்கு உதவியாகவோ அல்லது அவர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு என்ன வேலை செய்து வருகின்றார்? அவரை இல்லை என்ற நாத்திகர்களை ஆத்திகர்களாக்க, ஏன் கடவுள் அவர்கள் முன் பிரசன்ன மாகலாகாது? இருந்தாலன்றோ பிரசன்னமாவர்? இத்தியாதி கேள்விகளுக்குத் தக்கவிடை யாரும் கொடுத்தாரில்லை; விடை கொடாமையால் மதத்தவர்கள் கூறும் கடவுளும், அவருடைய திருவிளையாடல்களும் வெறும் கற்பனைகளெனக் கருத என்ன தடை?

மனிதர், தனி வாழ்க்கையிலாகிலும், சமூக வாழ்க்கை யிலாகிலும் பிரத்தியட்சமாகக் காட்டாவிட்டாலும், அனுமானிக்கவாவது கடவுள் எதையாவது செய்து வருகிறாரா என்று பார்ப்போம்.

நாம் பிறந்ததுமுதல் சாகும்வரை, நமது பெற்றோர், உற்றார், உடன் பிறந்தார், மற்றுமுள்ள ஜன சமூக மக்களைவிட, கடவுளாவது தெய்வங்களாவது நமக்கு உதவி இருந்ததாகத் தெரியவில்லை. காலை முதல் இரவு வரை, இரவு முதல் காலை வரை, நமக்குத் துணையாய் நிற்கின்றார்கள் நம்மைப் போன்றவர்களைத் தவிர மற்றபடி யாருமிலர். நமது முயற்சியால் எதுவும் திருவினையாகின்றதேயொழிய தெய்வத்தால் அல்ல.

நம்முடைய தேக அவயங்களும், தாய், தகப்பன் மூலமாக வந்த சக்தியால் கவனிக்கின்றன. வாய் பேசுவதும், கண் பார்ப்பதும், காது கேட்பதும், மூக்கு நுகர்வதும், நாக்கு ருசிப்பதும், தொண்டை விழுங்குவதும், தீனிப்பை ஜீரணிப்பதும் மற்றும் பல தேக உறுப்பு வேலைகள் செய்து வருவதும், தாய் தந்தையர் மூலமாக வந்த சக்தி (Energy) யால் அன்றி, வேறோர் கடவுளால் அல்ல. இதுதான் பிரத்தியட்சக் காட்சி. இதை யாரும் மறுக்க முடியாது.

நோய் வந்தாலும் அந் நோய்களுக்குக் காரணம் தேகத்திலுள்ள கிருமிகளோ அல்லது வெளியில் இருக்கும் கிருமிகளோதான் காரணம் அல்லாமல் நமது மெய், வாய், கண், முதலிய அவயவங்களுக்குப் புலப்படாத கடவுள் காரணம் அல்ல. என் வீட்டில் கிறித்தவ மார்க்கத்தைக் கற்பிக்கும் இரண்டு படங்கள் உள. அதில் இரண்டு குழந்தைகள் தண்ணீரில் மூழ்கிப் போகும் சமயத்தில், இரண்டு கந்தர்வர்கள் அதனைத் தடுத்துக் காப்பாற்றும் காட்சியைக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், ஒவ்வொரு நாளும் அநேக குழந்தைகள் கிணற்றிலும்,

குளத்திலும், வெள்ளத்திலும் மூழ்கிச் சாகின்றதை, கந்தர்வ ரூபங்கொண்ட கடவுளர் காப்பாற்றாத காரணம் என்னோ? குற்றம் இன்னதென்றும் தெரியாத அச் சிறு குழந்தைகளைக் காருண்ய கடவுளர் கைவிட்டதென்னை? தனக்கு வேண்டியவர்கள் ஒருவர் அபாயத்தினின்று மீட்கப் பட்டால், அது கடவுளருளானால், அபாயத்தி னின்று மீட்கப்படாத ஆயிரக்கணக்கானவர்களுக்கு கடவுள் அருள் எங்குப் போயிற்று? ஒரு மோட்டார் வண்டி விரைவாக ஓடும் அபாயத்தினின்று தப்பித்த ஒருவன், கடவுளருளால் தப்பித்துக் கொண்டேன் என்கின்றான். ஆனால், வருடமொன்றுக்கு 6,000 பேர் மோட்டார் வண்டி ஆபத்தில் அகப்பட்டு மாளும் நிகழ்ச்சியை அந்தக் கடவுள் ஏன் தடுக்கவில்லை? ஒரு அபாய சம்பவத்தில் பலர் மாண்டது அபாயத்தாலாம்! ஆனால், ஒருவன் தப்பித்துக் கொண்டது கடவுளாலாம்!! இது என்ன யுக்தியோ! அல்லது குயுக்தியோ! அதனை அறிஞர்களே அறிதல் வேண்டும். தான் கோரிய விஷயங்கள் ஒன்றுகூடி வந்தால் அது தெய்வத்தால் என்று எண்ணுகிறார்கள். ஆனால், கோரிய 99 விஷயங்கள் கைகூடாமைக்கு யார் காரணமோ அதனைக் கவனிப்பதில்லை. கப்பல் முழுகும் போது அதிலிருந்த சில கொலையாளிகள் தப்பித்துக் கொண்டால், அவர்களையும் தெய்வம் தான் காப்பாற்றி யதோ! பக்தர்கள் நியாயப்படி, அதுவும் கடவுள் அருளாய் இருந்தாலும் இருக்கலாம்! எப்படியெனில், திருடப்போன எலிக்கு மோட்சம் கொடுத்த ஈசன், கொலை யாளிகளை ஏன் தப்பித்து வைத்திருக்கக் கூடாது? கடவுள் என்ன வேலை செய்கின்றார் என்ற கேள்விக்குப் பக்தர்கள் திருப்திகரமான விடை கொடுப்பதாகத் தெரியவில்லை. அவர் செய்ததாகச் சொல்லும் வேலைகள், பக்தர்களுக் குள்ளேயே உடன்பாடில்லாமலிருக்கின்றன. இதை யாரும் நம்புவதற்கு இடமில்லை. உலகத்தை சிருட்டித்த மாதிரியும், மனிதனை சிருட்டித்த மாதிரியும், ஒரு மதத்தன்

சொல்லுவதுபோல மற்றோர் மதத்தன் சொல்லுவ தில்லை. செய்ததாகச் சொல்லும் காரியங்கள் யாவும் விளையாட்டுக் கதையாக இருக்கக் கண்டோம். கழைக்கூத் தாடிகளும், கடவுள் செய்ததாகச் சொல்லும் செயல்களை விட ஆச்சரியகரமான விளையாட்டுகளைச் செய்கின்றார் கள். ஒரு கண்ணிமைப்பொழுதில் மாங்காய் வித்திலிருந்து செடியும், கிளைகளும், பூவும், காயும், பழமும் உண்டாக்கிக் காட்டுகின்றார்கள்! இதைவிட "ஒரு நாளில் இவ்வுலகைச் சிருட்டித்தார் கடவுள்" என்று சொல்வதால் கடவுளுக்கு என்ன சிறப்பு? இந்த விசாரணையில் கடவுளுக்கு எந்த வேலையும் இருப்பதாகவாவது அல்லது அவர் செய்ததாக வாவது விளங்கவில்லை.

### அய்ந்தாம் அத்தியாயம்

# கடவுளுக்கு நமது உலகில் வேலை உண்டா?

முன் அத்தியாயத்தில் கடவுளுக்கு நமது தேக வளர்ச்சியிலாவது அல்லது அதன் நடத்தையிலாவது யாதொரு வேலையும் இல்லை என்பதைக் கண்டோம். தேகத்திற்கு அந்நியமாக உள்ள நமது பூமி நிகழ்ச்சிகளில் யாதாமொரு சம்பந்தமாவது கடவுளர்க்கு உளதா எனப் பார்ப்போம். நமது பூமியில் நிகழும் தோற்றங்கள் பல உள. மழை, காற்று, புயல், வெள்ளம் முதலிய நிகழ்ச்சிகள் யாவும் இயற்கையாகவே நடந்தேறி வருகின்றன. பவுதிக பூகோள நூலில், பூமியின்மேல் நிகழ்ந்துவரும் பிரகிருத சம்பவங்கள் யாவும் நடந்துவரும் முறையை நன்றாக விளக்கப்பட்டிருக்கின்றன. பூமி சூரியனைச் சுற்றி ஓடும் மார்க்கத்தில் சற்று அசைந்து ஓடுவதால், நான்கு காலங்களாகிய வேனிற்காலம், கோடைக் காலம், மாரிச் காலம், கூதிர்க்காலம் உண்டாகின்றன. இந்தக் காலங்களுக்குத் தக்கவாறு வெய்யிலும், மழையும், பனியும் உண்டாகின்றன. மழைக்காலங்களில் மின்சார சக்தியால், மின்னலும் இடியும் உண்டாகின்றன. வெய்யில் காலத்தில் பூமியின் மேலுள்ள தண்ணீர் நீராவியாகி, குளிர் காற்றுப் பட்டவுடன், இரவில் பனியாக நிலத்தின்மேல் விழுகின்றன. வெப்பம் அதிகரித்தால், காற்று மேல் எழுகின்றது. மேலெழுந்த காற்று குளிர்ச்சியடைந்தால் புயலாக அடிக்கின்றது.

இவ்விதமாக, காற்று, மழை முதலிய பிரகிருத சம்பவங்கள் யாவும், கடவுளோ அல்லது தெய்வங்களோ அல்லது பேய், பிசாசுகளோ, யாருடைய உதவி ஒத்தாசையு மின்றி நிகழ்ந்து வருகின்றன. கடலில் அடிக்கும்

அலைகளும், சமுத்திரங்களில் எழும் சத்தம், வெள்ளம் யாவும் சாதாரண காரணங்களால் நடக்கின்றன. மழை பெய்தால் ஆற்றில் வெள்ளமும், ஏரி முதலிய பள்ளங் களில் நீர்ப்பெருக்கும் காண்கின்றோம். கால மழையால் வெள்ளாமையும், அதில்லாவிட்டால் பஞ்சமும் நேரிடு கின்றன. பிரகிருதத்தில் நிகழ்ந்துவரும் சகல சம்பவங்களும் நாம் பார்க்கக்கூடிய காரணகாரிய முறையில் நடை பெறுகின்றன. எதன் மத்தியிலும் கடவுளோ, அல்லது தெய்வமோ, அல்லது பிரமமோ பிரவேசிப்பதை யாரும் அறியார். சில அபூர்வ நிகழ்ச்சிகள் கடவுளால் நிகழ்ந்தன வாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. ஊமைப் பெண்ணை பேச வைத்ததாகவும், குஷ்டரோகிகளை ஸ்பரிசத்தால் சுகப்படுத்தியதாகவும், சமைத்துச் சாப்பிட்ட பிள்ளை உயிருடன் தோன்றியதாகவும், இறந்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததாகவும், சூரியனை ஓடாமல் நிறுத்திய தாகவும், ஆற்றைப் பெண்ணாக்கித் தலையில் வைத்துக் கொண்டதாகவும், இன்னும் இவைபோன்ற அற்புதங்கள் நிகழ்ந்தனவாகவும், அவை கடவுளாலோ அல்லது கடவுள் அனுக்ரகத்தாலோ நிகழ்வுற்றனவாகவும் அநேக மதத்தவர்கள் எழுதிய புத்தகங்களில் படிக்கின்றோம். இந்த அபூர்வக் கதைகளை மெய்யெனப் பல கோடி பாமர மக்கள் நம்பியும், அந்த நம்பிக்கைமேல் தங்கள் வாழ்வை யும் நடத்தி வருகின்றார்கள். அறிஞர்களில் சிலரும் பண் டைக் காலங்களில் இவைபோன்ற அற்புதங்கள் நடந்திருக் கலாமெனவும் கூறுகின்றனர். இன்னுஞ் சில அறிஞர்கள், முற்காலங்களில் நிகழ்ந்தனவாகச் சொல்லும் அபூர்வ நிகழ்ச்சிகள் அநேகம் கற்பனைக் கதைகளாயினும், சில மாத்திரம் உண்மையாயிருக்கலாமெனக் கூறுகின்றனர். விசாரணைக்குப் பகுத்தறிவை அஸ்திவாரமாகக் கொண்ட அறிஞர்களில் சிலர் இவ்வித அபூர்வ நிகழ்ச்சி களுக்குச் சாட்சியம் போதாதெனச்சிலவற்றைத் தள்ளியும், சிலவற்றை மாத்திரம் உண்மையாய் இருக்கலாமென அந்தந்த வேத

புத்தகங்களிலிருந்தே ருஜு செய்ததாகக் கூறுகின்றனர். இத்தியாதி வாதத்திற்கு இரண்டு திருட்டாந் தங்களை எடுத்துக்கொள்ளலாம். முதலாவது, இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தது ஒன்று. இரண்டாவது பிரகலாதன் கதை. இதன் சம்பந்தமாக ஒரு பிரச்சினை யைக் குறிக்க வேண்டும்.

பஞ்ச தந்திரக் கதைகளில் சொல்லியிருக்கும் கதை களை உண்மையென நம்பும் குழந்தைகளுக்கும், வேத, புராண, விவிலிய நூல்களில் சொல்லும் கதைகளை உண்மையென நம்பும் மனிதர்களுக்கும் என்ன வித்தியாசம்? இந்த சங்கை, தத்துவஞான ஆராய்ச்சியிலும் மதவாதங்களிலும் முக்கிய சங்கையாகும். இவ்விரு தரத்தாருடைய நம்பிக்கைகளில் எது உண்மை? இந்தப் பிரச்சினை விஷயமாகக் கோடானுகோடி நூல்கள் இயற்றியுள்ளனர். மதங்களில் கூறப்பட்டுள்ள கடவுளர் கள் உண்மையாயின் புராணங்களில் கூறப்பட்டுள்ள கதை கள் உண்மையென ஏற்படும். அல்லது புராணங்களில் கூறி யுள்ள கதைகள் உண்மையாயின், அந்த திருவிளை யாடல்களைச் செய்து வந்ததாகச் சொல்லும் கடவுளரும் உண்மையானவர். ஆதலால் புராணக்கதைகளின் உண்மையில் கடவுள் உண்மையும் அடங்கியுள்ளது. அதே பிரகாரம் புராணக் கதையின் உண்மையின்மையில் கடவுள் இன்மையும் அடங்கியுள்ளதென அறியவும். உலகில் மதவாதிகளும், தத்துவ ஞானிகளும், பகுத்தறிவு சித்தாந்திகளும் வாதிக்கும் வாதங்களில் இதுவும் ஒன்று. இது மததத்துவ விசாரணையில் முக்கியப் பிரச்சினையாத லால் இவ்விடத்தில் சற்று விவரமாக இதனைக் குறிப்பி டுவோம்.

பஞ்ச தந்திரக் கதைகள் சிறு குழந்தைகளுக்கு விளை யாட்டாக எழுதப்பட்ட கதைகளாதலால், அதனைக் குழந்தைகள் சிலகாலம் உண்மையென நம்பிவந்த

போதிலும், வயது வந்தவர்களுக்கு அவை கதைகளே. மிருகங்கள் மனிதரைப்போல் பேசுவது கூடாமையால், அப்படி மனிதரைப்போல் நடித்ததாகச் சொல்லுவது வெறும் கதைகளேயாகும்.

ஆனால், வேதங்கள் தெய்வ வாக்கானவையென்று நம்புகின்றபடியால், அவைகளில் கூறியுள்ள கதைகளை உண்மையாகக் கொள்ளல் வேண்டுமென்பர். இந்த வாதத்தின் முதல் வழக்கு என்னவெனில், வேதங்கள் தெய்வ வாக்கென்று ருசுப்பிக்கும்வரை, இவர்கள் கூறும் வாதம் பொருந்தாது. ஆதலின் இந்த வாதம் முற்றுந்தவறு. இரண்டாவது வேத புராணங்களில் கூறியுள்ள அபூர்வ காரியங்கள் தற்காலத்தில் நடவாமையால் ஈஸாப் கதைகளைப் போன்ற (Easop's Fables) கதைகளெனவே ஏற்படும். இந்த கண்டனைக்கு என்ன விடை கூறுகின்றார்கள் எனில், சரித்திரங்களில் கூறியுள்ள முற்கால சம்பவங்களை உண்மையெனக் கொள்வது போல், அதே நியாய முகத்தானே, வேத புராணக் கதைகளையும் நம்பவேண்டுமென்பர். ஆதலின் சரித்திரங்களில் கூறியுள்ள கதைகளின் மேல் வைத்துள்ள நம்பிக்கையின் விசேடத்தை வேத, புராணக் கதைகளின்மேல் வைக்கலாமா என விசாரிப்போம்.

சரித்திரத்தின்மேல் வைத்துள்ள நம்பிக்கையின் விசேடமென்ன? முதலாவது, சரித்திர சம்பவங்கள் இன்றைக்கும் நடந்தேறி வருகின்றன. இரண்டாவது அந்த சம்பவங்களில் யாதும் அபூர்வமில்லை. மூன்றாவது, அச் சம்பவங்களுக்குத் தகுந்த சாட்சியம் இருக்கின்றன. முக்கியமாக சரித்திர சம்பவங்களை அதே காலத்து சரித்திர வாதிகளோ, அல்லது பார்த்தவர்களோ எழுதியிருக்கின்றனர். இதை Contemporaneous evidence என்பார் ஆங்கிலத்தில். சில சம்பவங்கள் சில சாஸனங்களில் வரையப் பட்டுமுள்ளன. செப்பேடுகளில் சிலதைக் குறிப்பிட்டிருக்கவும் காணலாம். சரித்திரங்கள் கூறும் கதைகளுக்கு சாட்சியம் அவை எழுதியுள்ள புத்தகங்களிலேயே ருசுவாக்கப்

படுகின்றது. இவைபோன்ற காரணங் களைக் கொண்டு பகுத்தறிவு சித்தாந்திகள், சரித்திரக் கதைகளை நம்புவதற்கு இடமுண்டு என்று கூறுகின்றனர். இவ்வித சாட்சியங்கள் வேத புராண சம்பவங்களுக்குக் கிடைக்காமையால், அவைகள் வெறும் கட்டுக்கதை களெனவே கொள்ள வேண்டுமென்பர். இந்த நியாயத்தை மேற்குறித்த இரண்டு திருஷ்டாந்தங்களினிடையே காணலாமாவென்று பார்ப்போம். இயேசுநாதர் உயிர்த் தெழுந்தாரென்று விவிலிய நூலில் எழுதியுள்ளதாகக் கூறுகின்றார்கள்.

முதலாவது, உண்மையில் உயிர் மரித்தவர், மூன்று நாள் பொறுத்து பிழைத்தார் என்பது சாதாரண அனுபவமல்ல. ஆனால், சில பிராணிகள், உயிரைத் துறக்காமலே, பலநாள் புதைக்கப்பட்டும் அசைவு அற்றும் இருந்து பிறகு அசைவு அடையும் சம்பவங்களைப் போல், ஏசுவும் (Suspended animation) உயிரை இழக்காமலேயே இருந்து, கல்லறை திறக்கப்பட்டவுடன், காற்றின் சம்பந்தத்தால் உயிர்த்து எழுந்திருக்கலாமென்பது ஓர் யுக்தி. மூன்றாவது, அவர் உயிர்த்தெழுந்ததாகச் சொல்லும் நூல்களிலேயே அந்தச் சம்பவம் சரித்திர பூர்வமாக நடந்ததாகச் சொல்வதற்கு இடமில்லை. அதாவது, ஏசு உயிர்த்தெழுந்த சம்பவத்திற்கு சாட்சியம் போதா. ஏசு உயிர்த்தெழுந்த கதை நான்கு சுவிசேஷங்களில் சொல்லியிருப்பதாகச் சொல்லுகின்றார்கள். ஆனால், இந் நான்கில், இரண்டுதான் உயிர்த்தெழுந்த அபூர்வ சம்பவத்தைக் குறித்திருக்கின்றன. செயின்ட் ஜான் (Saint John) சுவிசேஷம், இச் சம்பவம் நடந்ததாகச் சொல் வதில்லை. செயின்ட் லுய்க் (St.Luke) ஓர் போக்காகக் குறிக்கின்றது. இந்த சுவிசேஷத்தில் சொல்லியபடி செயின்ட் மாத்யூ (St. Mataew) வில் சொல்லவில்லை. ஆதி சுவிசேஷமெனக் கூறும் செயின்ட் மார்க் (St.Mark) இதனைக் குறிக்கவே காணோம். உலகப் பிரசித்தி பெற்ற இந்த சம்பவத்தின் கதி விசாரணையில் இதுவானால், மற்ற

அபூர்வ சங்கதிகளின் கதி என்னாம். பிரகலாதன் கதைக்கு ருசுவென்ன? தூணிலுமிருப்பார், துரும்பிலுமிருப்பார் என்று பிரகலாதன் சொன்னதும், அவன் தகப்பனாராகிய இரண்யன், தூணை உதைக்க, நரசிம்மம் தூணைப்பிளந்து வந்த கதை எவ்வித விசாரணைக்கும் இடம் கொடுக்க வில்லை. மத வைராக்கியத்தால் எழுதிவைத்த கதையென்றே முதல் பார்வையிலேயே தோன்றுகின்றது. சைவத்தைத் தாழ்த்தி, வைணவத்தை உயர்த்த ஏற்பட்ட கதையே அல்லாது, இது உண்மையல்ல.

இவ்விதமாகப் பண்டைக்கால நூல்களில் கூறியுள்ள அபூர்வக் கதைகள் யாவும், கற்பனைகளென முடிந்தால், கடவுளுக்கு மற்றென்ன வேலை? பூமிமேல் நிகழும் பூத பௌதிக சம்பவங்கள், இயற்கையாகவே நிகழ்வுறக் கண்டோம். பூமிமேல் நடமாடும் இவர்கள் நடத்தை யெல்லாம் தாங்களே செய்து வருவது பிரத்தியட்சக் காட்சி. மனிதருடனும், மிருகங்களுடனும், தாவரங் களுடனும், மணல், மலை, நீர், சமுத்திரம் முதலிய அசேதனங்களுடனும், கடவுள் கலந்து செய்து வந்ததாகச் சொல்லும் வேத, புராண திருவிளையாடல் யாவும், விசாரணையில் கற்பனையாக முடிவதைக் கண்டோம். இனி, கடவுளுக்கு உலகில் என்ன வேலை? ஒரு வேளை நமது உலகில் கடவுளுக்கு யாதாமொரு வேலையில்லாமற் போனபோதிலும் பிரபஞ்சத்திலுள்ள எந்த உலகி லாகிலும் கடவுளுக்கு ஏதாகிலும் வேலை உளதாவென இனிக் கண்டறிவோம்.

### ஆறாம் அத்தியாயம்

# கடவுளால் நடப்பது ஒன்றுமில்லை

முன் அத்தியாயத்தில், கடவுளுக்கு நமது உலகில் எந்த வேலையாகிலும் இருப்பதாகத் தெரியவில்லையென்று எடுத்துக் காட்டினோம். ஆனால், பிரபஞ்சத்தில் கண்ணுக்குத் தோன்றும் உலகங்களும், தோன்றா உலகங்களும் கோடானுகோடி இருப்பதாக வான நூலோர் கூறுகின்றனர். அவைகளை இவ்விடத்தில் குறிப்பாக எடுத்துக்காட்டி, அங்கு நிகழும் சம்பவங் களுக்குக் "கடவுள்" காரணகர்த்தராக இருக்கக் கூடுமா வென விசாரிப்போம்.

இதுகாறும் நமக்குத் தெரிந்தவரையில் பிரபஞ்சத்தில் நமது உலகைத் தவிர வேறு பலவித பொருள்களு மிருப்பதாகத் தெரிகிறது. நமது உலகைப் போன்று நவக்கிரகங்களென்று கூறப்படும் (நமது உலகம் நீங்கலாக உள்ள) மற்ற எட்டு உலகங்களும், எந்தவித உயிரும இருப்பதற்குத் தகுதியான இடமாக இல்லையென்று யூகிக்கலாமாம். அந்த உலகங்களில் சிலவற்றில் நமது பூமியிலுள்ள பொருள் இருப்பதாகத் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாக யூகிக்கப்படுகின்றது. மற்ற உலக வஸ்துகள் ஆவி மயமாக இருக்கக்கூடுமென யோசிக்க ஆதாரங்கள் இருக்கின்றன. புதன், சுக்கிரன், அங்காரகன் முதலிய சிறு கிரகங்களில் தாக்கும் சூரியனது வெப்பம் நமது உலகத்தைவிட மிகுந்தும் குறைந்துமிருக்கின்றது. இவைகளுக்கப்பாலுள்ள வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் முதலிய பெரிய கிரகங்களில், குளிர் அதிகமாக இருக்கக்கூடுமென யூகிக்கப் படுகின்றது. அவைகளுக் கப்பால் சென்ற வருடம் (1930) கண்டுபிடிக்கப்பட்ட புலோவெனாப் கிரகத்தில் தாங்கக் கூடாத குளிர் இருக்குமென்பதற்குத் தடை இல்லை. இவ்வுலகங்களில்

குளிர்ந்த அல்லது உஷ்ணமுடைய புயற்காற்று அடுத்தடுத்து நேரிடலாம். தண்ணீர் இருக்குமாகில் பனிக்கட்டியாக உறையலாம். இந்த உலகங்களில் எங்கும் கடின வஸ்துகள் இல்லாமல் குழம்பியதாகவே இருக்கக் கூடுமென்னும் யூகை வலுத்து வருகின்றது. வஸ்துகள் குழம்பியும், வெப்பமும், குளிரும் அதிகரித்தும், பனிப்புயல் அடித்தும் இவை போன்ற சம்பவங்கள் நேர்ந்திருப்பின் இவை யாவும் பூத பௌதிக குணத்தால் நிகழ்கின்றன வென்றெண்ண வேண்டும். ஆதலின் ஆகாய வஸ்துகளின் பௌதிக இலக்கணத்தால் நிகழும் சம்பவங்களுக்குக் கடவுள் உதவி ஏன் வேண்டும்? நமது உலகில், பௌதிக குணத்தால் ஏற்படும் தோற்றங்களாகிய மழை, காற்று, புயல், அலை, துவலை முதலிய சம்பவங்களுக்குக் கடவுள் அருள் வேண்டுமென எந்த அறிஞரும் கருதார். அதுபோன்று மற்ற கிரகங்களில் நிகழும் பௌதிக சம்பவங்களுக்குக் கடவுள் அருள் வேண்டுமென்பார் யார்? ஆதலின் மதத்தவர்கள் கூறும் கடவுளொருவர் இருப்பாராயின், அவருக்கு நவக்கிரகங்களில் எவ்வித வேலையும் இல்லையென்றே தீர்மானிக்கலாம்.

இவ்விடங்களில் கடவுளுக்கு வேலை இல்லையானால், இவைகளுக்கெல்லாம் பிறப்பிடமாகிய சூரியனிடத்தாகிலும் வேலையிருக்குமோ? நமது சூரியன் கோடானு கோடி நட்சத்திரங்களில் ஒன்று. சூரியனிடத்து எல்லா பொருள்களும் மூலவஸ்து (Elements) மயமாக இருக்கின்றன. இந்த மூலதத்துவங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள் வதால் அனல் கொண்டு கோடானுகோடி தூரம் சூரிய கிரகணங்கள் எழுகின்றன. இந்தக் கிரணங்கள்தான் நம்முலகில் வெய்யிலாகக் காட்டுகின்றன. சூரியனிட மெங்கும் உள்ள அனல் புயலாகவே காணப்படுகிறது. நமது வீடுகளில் உண்டாவதைப்போல் சூரியனிடத்திலும் வஸ்துக்கள் எரிகின்றபடியால் வெளிச்சமும் அனலும் உண்டாகின்றன. கட்டை பற்றி எரியவாகிலும், கரி பற்றி

எரியவாகிலும், காடு பற்றி எரியவாகிலும் கடவுள் ஒருவர் வேண்டாமைபோல், சூரியன் பற்றி எரிவதற்கும் கடவுள் அனாவசியமன்றோ?

நட்சத்திரங்களும் சூரியனைப்போல் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன. அவைகளில் பற்றி எரியும் சம்பவத்தைத் தவிர, மற்றெந்த சம்பவமும் யூகிக்க இடமில்லை. சில நட்சத்திரங்கள் சூரியனைவிட கோடி பங்கு பெரியதாக இருக்கின்றன. அவை போன்ற நட்சத்திரங்கள் கோடிக் கணக்காக இருக்கின்றன. இந்தக் கோடானுகோடி நட்சத்திரங்களுக்கு மத்தியிலும் அப்பாலும் வெளி இருக்கின்றன. இந்த வெளிகளுக் கப்பாலும் நட்சத்திரக் கூட்டங்களடங்கிய வெண்மாசிக் கூட்டங்களிருக்கின்றன... வெண் மாசிக் கூட்டங்களுக் கப்பாலும் வெளிகள் இருக்கின்றன.

இவ்விதமாக நட்சத்திரங்களும், அவைகளுக்கப்பால் வெளி எனும் பாழும், பாழுக்கப்பால் நட்சத்திரங்களும் வரிசை வரிசையாகக் காணப்படுகின்றன. நமது கவிகள், "முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய் அப்பா லும் பாழென்று அறி" என்று பாடியது போல், வான ஆராய்ச்சியிலும் அங்குமிங்கும் நட்சத்திரங்களும், மிகுதி இடங்கள் யாவும் பாழாகவும் இருப்பதாகத் தோன்று கிறது. இந்த அகண்டாகாரப் பாழ்வெளியில் கடவுளு டைய வேலைதான் மனித சிந்தனைக்கு எட்டவில்லை. சிந்தனைக்கு எட்டாத வேலையை இல்லை என்று கூறலாமன்றோ?

மேற்கூறிய மகத்துகளில் கடவுளுடைய வேலை இன்னதென்று சொல்ல இடந்தராவிடினும் அணுக்களி லாகிலும் கடவுளுடைய திருவிளையாடல் காணப்படு மாவெனப் பார்ப்போம்.

உலகப் பொருள்கள் மூன்று நிலவரத்தில் காணப்படுகின்றன. அவையாவன:-

ஆவிமயமாகவாவது (Gas) நீர்மயமாகவாவது (Liquid) கனத்தமயமாகவாவது (Solid) எல்லாவிதப் பொருள்களும் இருக்கக் காணலாம். இவ்வித நிலவரத்தையொத்த பொருள்கள் யாவும் 90 பூதங்களாக, அதாவது மூலப் பொருள்களாகப் பிரிகின்றன. இம் மூலப் பொருள்கள் (Elements) அணுக்கள் சையோகத்தினால் (Atoms) வெவ்வேறாகின்றன. சுமார் 20 வருடங்களுக்குமுன் இந்த அணுக்களைப் பிரிக்க முடியாதென்று எண்ணி வந்தார்கள். ஆனால் விசாரணை முற்ற முற்ற இந்த அணுக்களும் இவைகளுடைய சிறிய பரமாணுக்களில் கலப்புற்றிருக்கக் காணப்பட்டன. இந்த பரமாணுக்களை எலெக்டிரான்ஸ் (Electrons) புரோடான்ஸ் (Protons) என்று பெயரிட்டழைக் கின்றனர்.

இவைகளுடைய சையோகத்தினால், அணுக்களும், அணுக்களின் சையோகத்தினால், மகத்துக்களும் உண்டாகின்றன. பற்பலவித சையோகங்களால் அணுக்களும், அணுக்களின் சையோகங்களினால், அணுத்திரள்களும் (Molecules) அணுத்திரள்களின் சையோகத்தால், கலப்புற்ற பொருள்களும் உண்டாகின்றன. இத்தியாதி நிலைமைகளில் பூத பௌதிக குணங்களே காணப்படுகின்றனவேயொழிய வேறு பிரத்தியேகமான ஓர் கர்த்தா, அல்லது பல கர்த்தர்களையாகிலும் காண முடியவில்லை. வஸ்துகள் கனத்த நிலைமையிலிருந்து நீர்மயமடைகிறது நீர்மயத்திலிருந்து ஆவிமயமாகிறது. இதே மாதிரி, ஆவி நீராகவும், நீர் கனமாகவும் மாறுகிறது. இத்தியாதி மாறுதல்கள் சீதோஷ்ண ஸ்திதி மாறுதலால் உண்டாகின்றன. அணுக்கள் அடையும் மாறுதலும் இவ்வாறே சீதோஷ்ண காரணத்தால் நிகழ்கின்றன. இதே விதமாக, அணுக்கள் சையோகத்தினால் பரமாணுக்களின் சையோகங்களும் பிர்ப்ஞ்சப் பொருள்கள் யாவும் பல்வேறு சீதோஷ்ண ஸ்திதிகளால் உண்டாக்கப்படுகின்றன. இந்த நிகழ்ச்சிகளில் காணப்படும் சீதோஷ்ண ஸ்திதிகளைக் கடவுளெனலாமா? இவ்வாறு கூறினால் உலகம் நகைக்கும் அல்லவா?

பிரபஞ்சப் பொருள்களில், சீதோஷ்ண ஸ்திதி எவ்விதம் மாறுதல் பெறுகின்றதென்பதை விசாரிப்போம். சூரியனிடத்தில் உள்ள அணுக்கள் துப்பாக்கிக் குண்டு ஓடும் வேகத்தைக் காட்டிலும் ஆயிரம், பதினாயிரம் பங்கு அதிவேகமாக ஒடுகின்றமையால் அவ்வளவு அனல் எழுகின்றது. நமது மின்சார விளக்கில், அணுக்கள் குண்டைவிட 100 பங்கு அதிகமாக ஓடுகின்றமையால், அவ்வளவு வெளிச்சமும் அனலும் உண்டாகின்றன. சாதாரண நிலக்கரி, கட்டைகளிலுள்ள அணுக்கள், குண்டைவிட 10 பங்கு அதிகமானால், நமது சாதாரண தீயையும் அனலையும் உணர்கின்றோம்.

இவ்விதமாக பரமாணுக்களும், விரைவாக அசைவதால் அனலும், தீயும், உஷ்ணமும் உண்டாகின்றன. பரமாணுக்களின் அசைவால்தான் சூரியனிடத்து 40,000 டிக்ரிக்கு மேற்பட்ட உஷ்ணமும் நட்சத்திரங்களில், அதற்கு மேற்பட்ட உஷ்ணமும் வெண்மாசிக் கூட்டங்களில், அதனினும் அதிக விரைவால், கண்களுக்கு எட்டாத உஷ்ணமும் உண்டாகின்றன. இந்த விரைவு குறையக் குறைய, பரமாணுக்கள் அணுக்களாகவும், அணுக்கள் அணுத்திரன் கூட்டமாகவும் அணுத்திரள்கள் மகத்தாகவும் மாறுகின்றன. ஆதலின் பிரபஞ்ச உற்பத்திக்கு ஆதிமுதல்வன் யாரெனில், பரமாணுக்களின் சலனமென்றே கூறவேண்டும். இந்தச் சலனத்தைக் "கடவுள்" என்று அழைக்கலாமா? இந்தச் சலனத்தால் தான் சூரிய சந்திரர்களும், நட்சத்திரங்களும், நமது உலகமும், மற்ற கிரகங்களும், உலகிலுள்ள சில ஜீவராசிப் பொருள்களும், நீங்களும், நாங்களும், மற்றுமுள்ளோரும் ஆக்கப்படுகின்றோம். இந்தச் சலனத்தைக் கடவுளென்று எண்ண லாமா? மெய்ஞ்ஞானத்திற்கெட்டிய வரையில் இந்தப் பரமாணுக்களின் சலனமே, 'பிரபஞ்ச உற்பத்திக்கும், நிகழ்ச்சிக்கும், அழிவுக்கும் காரண பூதமாய் இருப்பதென அறிக.

இந்தச் சலனத்திற்கு ஆதி அந்தமிருப்பதாக எண்ணவும் இடமில்லை. உயிருள்ள வஸ்துகளிலும், உயிரற்ற வஸ்துகளிலும் இந்தச் சலனம், அதாவது அசைவு இருந்துகொண்டிருக்கிறது. இந்த அசைவுதான் நட்சத் திரங்களினிடத்தும், உலகங்களினிடத்தும், உலகப் பொருள்களினிடத்தும் நாம் காண்பதாகும். பிரபஞ்சப் பொருள்கள் ஆவதும், அழிவதும் இந்தச் சலனத்தால் தான். சிருட்டி, திதி, சங்காரமெனப்படும் மூவகை வேலைகளும் இந்தச் சலனத்திற்கே பொருந்தும். நமது சலனத்தின் பிரசண்ட ஏகாதிபத்தியத்தில் மதத்தர் தொழும் கடவுளுக்கு என்ன வேலை என்று கேட்கின் றோம்? பரமாணு முதல், சூரிய சந்திர நட்சத்திர மகத்துக் கள் வரை நிறைந்துள்ள பிரபஞ்சத்தில், அசைவே எல்லா சம்பவங்களுக்கும் காரண பூதமாயிருக்கும்போது கடவுளுக்கு என்ன வேலையெனவும் கேட்கிறோம்? கற்பித வார்த்தைக்கு என்ன இருப்பிட மென்று சொல்லக் கூடும்? என்ன வேலை எனவும் சொல்லக் கூடும்? இந்திரஜால, மந்திரஜால, தந்திரஜாலக்காரர்களே இதற்கு விடைகூற வேண்டுமேயொழிய, அறிஞர்களுக்கு "கடவுள்" ஒருவர் இருப்பதாகவும், அவர் எங்கே இருக்கின்றார் எனவும், அவர் வேலை இன்னதென்றாகிலும் பல்லாண்டுகளாகவே விளங்காமலே இருந்து வருகின்றது.

### ஏழாம் அத்தியாயம்

# கடவுள் நல்லவரா, கெட்டவரா?

கடவுள் ஒருவர் இருப்பாராயின் அவர் நல்லவரா அல்லது கெட்டவரா என்ற கேள்விக்கு, மதவாதிகள் என்ன சமாதானம் சொல்லுகின்றார்கள் என்று பார்ப் போம். எந்த மதத்தரும், நாம் மனிதனைத் தீர்க்கமாக நல்லவனென்றாகிலும் கெட்டவனென்றாகிலும் மதிப்பது போல் கடவுளை மதிப்பதில்லை. ஆனால், எல்லா மதத்த ரும் பொதுவாகக் கடவுளை நல்லவரென்றே சொல்லு கின்றார்கள். எப்படி? அதாவது எந்த நடவடிக் கையால் அவரை நல்லவரென்று சொல்லுகின்றீர்கள் என்றால், அதற்குச் சரியான விடை இல்லை. "கிருபாநிதி" "காருண்ய மூர்த்தி" "தயாபரன்," "ஆபத்பாந்தவன்" என்று தங்கள் கடவுளாகிய விஷ்ணுவை வைணவர் துதிக் கின்றார்கள். சைவரும், "சிவம்" என்றால் மங்களம் என்று தங்கள் கடவுளை வாழ்த்துகின்றார்கள். (God is Good) "கடவுள் நல்லவர்" என்று கிறித்தவர் சொல்லுகின்றார் கள். வேதாந்தி கள் தங்கள் கடவுளுக்குக் குணமுண்டென்று சொல்வ தாகத் தெரிய வில்லை. "குணாதீதன்" "குணரகிதன்", "மனம், வாக்கு, காயத்திற்கு எட்டாதவன்" என்று வழங்குகின்றார்கள்.

இந்து சாசனங்களில் (Philosophies) அதாவது, வேதாந்தம், சாங்கியம் முதலிய தத்துவ நூல்களில் கடவுள் குணத்தைக் குறித்து ஒன்றும் சொல்வதாக இல்லை. சாங்கிய தத்துவத்தில் ஈசுவரனே கிடையாதாகையால் அவர் குணத்தைப் பற்றிப் பேசவேண்டிய அவசியமில்லை. ஆயினும் அதிலிருந்து முளைத்த யோக தரிசனத்தில் ஈசுவரனைக் குறித்துப் பேசப்பட்டிருக்கிறது. யோகத்தில் கூறியுள்ள குணங்கள், மனித குணத்தை விசாலப்படுத்தி அதை ஈசுவரன் மேலேற்றியிருப்பதாகவே தெரிகிறது. வேதத்தில் (இருக்கு வேதம்) கடவுள் மனிதனைப் போலவே சில விஷயங்களில் நடப்பதாகச் சொல்லுகிற

படியால் மனிதனுக்குள்ள குணங்களை வேதத்தில் கூறியுள்ள கடவுள் வகித்திருப்பதாகக் காண்கின்றோம்.

மேல்நாட்டுத் தத்துவ நூலாசிரியர்கள் பலர் இருக்கின்றார்கள். இவர்களில் மதசம்பந்தமாக "கடவுளைப் பற்றி" எழுதுகின்றவர்களும் உண்டு. இவர்கள் மனித குணங்களைத் தாங்கள் கூறும் கடவுளுக்குத் கொடுப்பதில்லை. ஸ்பைனோஸா (Spinoza) என்ற ஒரு பெரியார் தனது கடவுளுக்கு நன்மை தீமையாவது, சந்தோஷம் கோபமாவது, அன்பு வெறுப்பாவது இருப்பதாகச் சொல்லவில்லை. மனிதன் விஷயத்தில் யாதாமொரு சம்பந்தமும் வைத்துக்கொள்ளாததுதான் தனது கடவுள் என்கின்றார். காண்ட் (Kant) என்ற பிரபல ஜெர்மன் தத்துவஞானியும் ஸ்பென்சர் (Spencer) என்ற பிரபல தத்துவ ஞானியும் கடவுளைத் "தெரியப்படாதவர்" (Unknowable) என்று கூறுகின்றனர். தெரியப்படாத வஸ்து வின் குணத்தை அறிய முடியாதாயினும், அறியப்படாத தென்று எப்படி அந்த ஞானிகளுக்குத் தெரியவந்ததோ என்பதுதான் விளங்கவில்லை. ஜெர்மனியில் இன்னொரு பிரபல பெரியார் ஒருவர் இருந்தார். அவர் பெயர் ஹெகெல் (Hegel) என்பது. அவருடைய கடவுள் "எண்ணம்" (Idea) ஒன்று தான் உடையவராம்! இவருக்குப் பின் வந்த ஷோபன்யெர் (Shopenheur) என்ற பிரபலஞானி, தன்னுடைய கடவுளுக்கு (Will) அதாவது, இச்சை மாத்திரம் உண்டு என எழுதுகின்றார்.

பிராட்லே (Bradley) என்ற ஆங்கில தத்துவ ஞானி, தனது கடவுளுக்கு Absolute என்று பெயர் கொடுத்து அதன் லட்சணங்கள் இன்னதென விளங்கச் சொல்லாமல் விட்டுவிட்டார். இன்னும் அந்த தத்துவ விவேகிகள் மேல் நாட்டில் கடவுளைப்பற்றி எழுதுகின்றார்கள். இவர்கள் மனிதனுக்குள்ள குணாகுணங்களையே தங்கள் கடவுளுக்குக் காட்ட வெட்கப்படுகின்றார்கள். இவ்விதமாக மேல் நாட்டுக் கீழ்நாட்டு மதத்தவர்களும், தத்துவ விவேகிகளும் தத்தம் கடவுளை நல்லவரென்றாகிலும் தீர்க்கமாகச்

சொல்லுவதைக் காணோம். "குணாதீதன்" என்று சொன்னால் யாருக்கு என்ன தெரிந்துவிடும்? குணமின்றி எந்தப் பொருளும் விளங்கமுடியாது. கடவுளுக்குக் குணமில்லாவிட்டால் எப்படி இருப்பதாகவாவது தெரிந்துகொள்ள முடியும்? ஆனால், கீழ்த்தரத்திலுள்ளவர்கள் கடவுளைக் குணாதீதனென்று சொன்னால் அறிய மாட்டார்கள் சில கற்பனா குணங்களை அந்தச் சொல்லின் மேலேற்றியதாகத் தெரிகிறது. மனிதனுடைய குணங்களே நமக்குத் தெரியு மாதலால் அந்த லட்சணங்களையே தங்கள் கடவுளுக்குக் கொடுத்ததாகவும் தெரிகிறது. சாதாரண ஆகம புராணங்களில் கடவுளை சாமான்ய ஜனங்கள் நடிக்கும் மாதிரியாகவே நடந்துகாட்டுகிறார் என்று சொல்லப்படுகிறது. அவர் சில அபூர்வ காரியங்களைச் செய்ததாகச் சொல்லுகின்றார்கள். (Miracle) இவர் செய்த மாதிரியாகவே சில பக்தர்களும் செய்ததாகவும் கட்டிவிட்டிருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் (Old Testament) கடவுள் செய்த அபூர்வ திருவிளையாடல்கள் அவர்கள் சீடர்கள் செய்ததாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. மனித குமாரனாகிய ஏசு செய்த அபூர்வ காரியங்கள் அவருக்குப் பின் அநேக ஆண்டுகளாக அநேக பாதிரிமார்கள் (Church Fathers) செய்ததாகவும் சொல்லுகின்றார்கள். ரோமன் கத்தோலியர் புத்தகங்கள் முழுமையும், கிறித்தவர்கள் செய்த அபூர்வ வேலைகளைப் பற்றியே விசேடமாக எழுதப்பட்டுள்ளன. தங்கள் கடவுளுக்குச் சந்தோஷத்தையும், கோபத்தையும் காட்டுகின்றார்கள். பொய், களவு, கள், காமம் முதலிய தீச் செயல்களைக் கடவுள் செய்ததாகவும் எழுதியுள்ளார்கள். எந்த மதக் கதைகளை எடுத்துக் கொண்டாலும், அந்தந்த மதக் கடவுள் நன்மையான குணங்களையும், தீமையான குணங்களையும் படைத்திருப்பதாகவே மத நூல்கள் கூறுகின்றன. கிறித்தவக் கடவுள் தகாத காரியங்களைச் செய்ததாக விவிலிய நூலில் கண்டிருக்கிறது. இந்துக்

களுடைய புராணங்களில் திருடி கோயில் கட்டினவனுக்குக்கூட மோட்சத்தை அருளியதாகச் சொல்லுகின்றார்கள். கள்ளனாகிய திருமங்கை ஆழ்வாருக்குக் கடவுள் மோட்சம் அருளிதாக வாய் கூசாமல் சொல்லுகின்றார்கள். இந்த ஆபாசங்களுக்கெல்லாம் என்ன சமாதானம் சொல்வதென்று தெரியவில்லை. சில மத பாசாங்குக்காரர் (Apotogists) இவைகளைப் பொய்யென்று சொல்லாமல் இதற்கு வேறு அர்த்தமென்று சாக்குப் போக்குச் சொல்லி வயிற்றை வளர்க்கின்றார்கள். இந்த மோசம் எத்தனை காலம் இவர்களைக் காப்பாற்றும்?

கடவுளைப் பற்றி, மதத்தர்கள், பக்தர்கள் கூறும் கதைகளை விசாரிக்கப் புகுந்தால், அவைகள் எல்லாம் கட்டுக்கதைகளென ஏற்படுகின்றன. இந்தக் கட்டுக் கதைகளை எப்படி உண்டாக்கப் பழக்கம் வந்ததென்றால், மனிதனுக்கு இயற்கையாகவே, பேச ஆரம்பித்த பிறகு தன் குணங்களைப்போல் கடவுளுக்கும் குணங்கள் உண்டு என, ஆலோசிக்கும் சக்தி உள்ளவனானான். இந்தப் பழக்கத் தால், கடவுளரும் தன்னைப்போலவே குணங்களைப் பெற்றிருக்க வேண்டுமென்று சிந்தித்தான். இந்த சிந்தனை களைச் சொல் மயமாக்கி, புத்தகங்கள் எளிதில் வரையப் பெற்று அதனால் கடவுளரின் அபூர்வ காரியங்களெனப் பெயர் பெற்றன. இந்தக் கட்டுக்கதைகள் தான், புராணங் களிலும், விவிலிய நூல்களிலும், கொரான், செண்ட் அவிஸ்தா (Send Avesta) என்னும் பார்சீ ஆகமங்களிலும், மற்றுமுள்ள மத நூல்களிலும் வரைந்துள்ளனர். இந் நூல்களை விசாரிக்குமளவில் மனிதனுக்குள்ள குணங்கள் யாவும் கடவுளுக்கு அதிகமாயிருத்தலை உணரலாம். தான் தனக்குக் கீழ்ப்பட்டவர்களைப் பயப்படுத்திச் செய்யும் செய்கைகளைப்போல் தனது கடவுளுக்கும் அவ்விதச் செய்கைகளைக் காட்டினான். சிவபெருமான் சூரியனைப் பல்லைப் பிடுங்கியும், சந்திரனை மூக்கையறுத்தும் தண்டித்த தாகச் சொல்லும் புராணக் கதைகள் இவன் கட்டிய கதைகளே.

பைபிள் நூலில், கடவுள் கோபித்துக் கொண்டதாகவும், வெள்ளங்களை உண்டாக்கியதாகவும், புயல்களைக் கொண்டு மனிதரை அடக்கியதாகவும், நோய்களை உண்டாக்கி, தன்னுடைய பகைவர்களை அழித்ததாகவும் சொல்லும் கதைகள் யாவும் கட்டுரைகளே. சூனியத்தால் மனிதன் திடீரென நோயுற்றான், பிசாசால் பிடிக்கப்பட்டு அலறுகின்றான் என்று நமது பாமர மக்கள் சொல்வதும், இந்தக் கற்பிதக் கதைகளைக் கொண்டே சொல்லுகிறார்கள். கடவுள் அபூர்வகாரியங்களைச் செய்தார் என்ற கற்பனைகளை மனிதர் நம்புவதால் பாமர ஜனங்களுக்கு விளையும் கெடுதிகளுக்கு அளவே இல்லை. விஷ நோய்கள் அம்மன், பிடாரி, மாரியாத்தாள், வெள்ளைச் சேலைக்காரி, முனீசுவரன் முதலிய தேவதைகளால் உண்டாகின்ற மூட நம்பிக்கை நமது ஏழை மக்களிடம் குடிகொண்டுவிட்டது. 100 வருஷ காலமாகச் செய்து வந்த விசாரணையால் மேற் கூறியது போன்ற நோய்கள் சிறுசிறு கிருமிகளால் உண்டாகின்றதெனத் தெரிந்திருந்தும், நமது ஏழைத் தொழிலாளிகள் அதை நம்பாமல், மூட வயித்தியர்களும், கிழவிகளும் சொல்லும் கழிப்பு, பூசை, பிரார்த்தனை, பலி முதலியவைகளால் நோய் நீங்குவதாக நம்புகின்றார்கள். தேங்காயில் மூன்று "கண்களில்" மூன்று வத்தியைக் கொளுத்தி அல்லது மிளகாயைச் சுட்டுத் தெருக்களில் போடுவதற்கும், ஈக்களால் உண்டாகும் குழந்தைக் கழிச்சலுக்கும் என்ன சம்பந்தமென விசாரித்தறிந்தார் இல்லை. இந்த மூடநம்பிக்கைகளால் அநந்தம் குழந்தைகள் வீணே சாகின்றன. முக்கியமாக இவ்வித மூடநம்பிக்கையால், அநேக சிறுவர்கள் நல்ல சிகிச்சையின்றி இவ்வுலக வாழ்வை அனுபவிக்காமலே இறக்கின்றார்கள். இவ்வித கொடுமையான மூடநம்பிக்கைகளைப் போக்காமல் - உயிர்களைக் காப்பாற்றாமல், வீணாக கதர், மதுபானம் மறியல் முதலிய சொற்ப வேலைகளைச் செய்யச் சொல்வது கொடுமையிலும்

கொடுமையாகும். நமது நாட்டுக்கு உயிர்கள் வேண்டுமா? அல்லது உயிரை வாட்டும் கதர் வேண்டுமா? எது முதலில் முக்கியமாக வேண்டும்? இதனை யோசியாது காந்தியாரும் அவருடய திருக் கூட்டங்களும் வியர்த்தமான காரியங்களைச் செய்து, பாமர மக்களின் துக்கங்களை நீள வைப்பது மிக்க பரிதாப மானதே.

மூட பக்தியால் பாமர மக்களுக்கு விளையும் கெடுதிகள் யாவும், மதத்தர்களும் மத பக்தர்களும் முன் கட்டிய பொய்க்கதைகளாலென அறிக. இவர்கள் மூடத் தனமான காரியங்களால் கட்டிய கதைகளை நம்பியே பாமர ஜனங்களுக்குப் பில்லி, சூன்யம், பேய், பிசாசுகளின் மேல் நம்பிக்கை விழுந்திருக்கின்றது. கடவுள் நாம் பார்க்கும் இயற்கைக் காரியங்களுக்கும் சம்பவங்களுக்கும் மாறாகக் காரியங்களைச் செய்தார் என்றும், சம்பவங்கள் நடந்தன வென்றுங் கூறும் கட்டுக்கதைகளை நம்பி நோய் களுக்குச் செய்யவேண்டிய பரிகாரங்களைச் செய்து தீர்த்துக்கொள்ளாமல், தெய்வங்களாலும், பேய் பிசாசு களாலும் நோய்கள் உண்டாகின்றனவென நம்பி, அந்த தேவதைகளுக்குப் பூஜை, பலி முதலிய உபயோகமற்ற காரியங்களைச் செய்து, நோய்களைப் போக்கிக்கொள் ளாமல் சாகின்றனர். இந்த மூடப் பழக்கத்தினாலேயே நமது நாட்டில் அரைக்கோடி மக்கள் அகால மரண மடைகின்றார்கள். பேதி, வயிற்றுப் போக்கு, விஷசுரம், பாரிசவாயு, வயிற்றுவலி, சீதபேதி, இழுப்பு, ஜன்னி, பித்தப் பெனாத்தல் முதலிய நோய்கள் சாதாரணமாகச் சிற்சில விஷக்கிருமிகளால் (சிறுசிறு பூச்சிகள்) உண்டாகின்றன. அந்தப் பூச்சிகளைக் கொன்றவுடன் நோய் நீங்கிவிடும். ஆனால், இதனை அறிந்தவரும் அறியாதோரும் முனீ சுவரனுக்குப் பூசையும், மாரி அம்மனுக்குப் பிரார்த் தனையும் செய்து, நோயை அதிகரித்துக் கொள் கின்றார்கள். இந்த தீவினைகளெல்லாம் மூட பக்தியால் நிகழ்கின்றன. இல்லாத கடவுளுக்கு, இல்லாத குணங்க

ளெல்லாம் உள்ளதாகக் கற்பித்து, கடவுள் இதைச் செய்வார், அதைச் செய்வாரென்று மூட நம்பிக்கையைக் கொண்டு பல பயனற்ற மந்திர தந்திரங்களில் பணத்தை வியர்த்தமாக்கி, அநியாயமாக மடியும் மக்களை என்ன வென்று அழைப்பது?

கடவுள் நல்லவரென்றால், புலியையும், ஆட்டையும், சிங்கத்தையும், பசுவையும், பாம்பையும், தேளையும், அம்மைப் பூச்சி, பேதிப் பூச்சி, சுரப்பூச்சி முதலிய கொடிய பூச்சிகளையும் என் சிருட்டித்தாரெனக் கேட்கின்றோம்? கடவுள் நல்லவராய் இருந்தால், அவரைப் பற்றி ஏன் பயப் படவேண்டும்? இந்தக் கற்பிதங்களால் பல ஆயிர வருடங்களாக நமது நாட்டு மனிதர், மதிமயங்கிப் பல பயனற்ற சரியை, கிரியைகளைச் செய்து பரிதவித்துச் சாகின்றனர்.

பிரபஞ்சத்தில், நமக்குத் தெரிந்தவரை, இருக்கும் பிராணிகளில் மனிதனைப் போன்ற மூடப்பிராணி இல்லை என்றே சொல்லலாம். இல்லாத தெய்வங் களையும், பிசாசுகளையும் தானே சிருட்டி செய்து கொண்டு, அந்தச் சொற்களுக்குத் தானே நற்குணங் களையோ, துர்க்குணங்களையோ காட்டி, தான் கொடுத்த குணத்திற்குப் பயந்து, அந்த பயத்தைப் போக்க, பிரார்த் தனையும், பூசையும்; காவையும், பலியையும் செய்து, அவைகளால் தன்னையும், பிறரையும் இம்சித்துக் கொண்டு, இவ்வுலகில் உயிர் வாழும் சம்பவம் பிரபஞ் சத்தில் வேறு எங்கும் இருக்காது என்று தீர்க்கமாக எண்ண லாம். கடவுளையும், தெய்வங்களையும், முனீசுவரனையும், காட்டேரியையும், பேய் பிசாசுகளையும் தானே சிருட்டித்தது ஒரு பக்கமிருக்க, இந்தச் சொற்களுக்கேற்ற உருவங்களைக் கற்களால் அமைத்துக்கொண்டு அவை களின் முன் தாள்பணிந்து தெண்டனிடுவதென்றால், இந்த மனிதனுடைய மதியை என்னவென்று மதிப்பது! இதுவும் இன்னொரு பக்கமிருக்கட்டும். இவர்கள் சிருட்டித்த

கடவுளையும் தெய்வங்களையும் வகுப்புவாரிக் கடவுளாக்கிக் கொண்டு, உன் தெய்வம் என் தெய்வமென்று வித்தியாசப்படுத்திக் கொண்டு, அந்த மனோகற்பிதங்களை ஒன்றுக்கொன்று போட்டிபோடச் செய்து, தத்தம் தலைகளை உடைத்துக் கொள்வதென்றால், இதைவிட உன்மத்தம் உலகில் வேறு என்ன இருக்கின்றது?

பிரபஞ்சத்தில் உள்ள உலகங்களில், நமக்குத் தெரிந்த வரையில் இவ்வுலகில் வாழும் பிராணிகளுக்குள்ளே மனிதன் தான் "கடவுள்" என்ற கற்பனையைக் கற்பித்திருக்கின்றவன். இவன் குணத்திற்கும், இவன் அறிவிற்கும், இவன் அனுபவத்திற்கும், இவன் நடை, உடை, பாவனைக்கும் தக்கவாறு, தான் கற்பித்த கடவுளுக்குக் குணத்தையும், அறிவையும், அனுபவத்தையும் நடையுடை பாவனையையும் அமைக்கின்றான். வேடனுடைய கடவுள் வேட்டையாடு கின்றது; திருடனுடைய கடவுள் திருடுகிறது; (கள்ளர் அழகர் கடவுள்), விபச்சாரிகளுடைய கடவுளும் விபச்சாரம் செய்கின்றது; மோசக்காரர்களுடைய கடவுள் மோசம் செய்கின்றது. மீன் பிடிப்போர் கடவுள் மீன் பிடிக்கின்றது; சண்டை போடுகின்றவன் கடவுள் சண்டையிடுகின்றது; ஆண் பெண் உருவங்களைப் பாவனை செய்து (Mongomy) அதாவது ஒரு பெண்ஜாதி திட்டத்தில் கட்டுப்பட்டவனுடைய கடவுள் ஒரு பெண் ஜாதியுடனும், பல பெண்ஜாதி திட்டத்தில் இருப்பவனுக்கு (Polygomy) உரிய கடவுள் பல பெண் ஜாதியையும் உடையதாகப் பாவிக்கின்றான். குளிர் தேசத்திலுள்ள கடவுளுக்கு, கம்பளியை ஆடையாகப் போர்த்துகின்றான். உஷ்ண பூமியில் நிர்வாணமாகவே கடவுளை அமைக்கின்றான். இன்னும் பற்பல விநோத திருஷ்டாந்தங்களால் பக்தனைப் போலவே கடவுளும் அமைக்கப்படுகின்றாரே ஒழிய, கடவுளுமில்லை, கடவுளுக்குக் குணமுமில்லை. எல்லாம் மனித னுடைய கற்பனைகளென அறிக.

எட்டாம் அத்தியாயம்

# கடவுளுக்கும் உலகத்துக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை

அநேக ஆயிரம் நூற்றாண்டுகளாக நமது உலகமே பிரபஞ்சமென்றும், வானத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களும், சூரிய சந்திரர்களும் நமது உலக நன்மைக்கே உண்டாக்கப்பட்டவைகள் என்றும் நமது முன்னோர்கள் எண்ணி வந்தார்கள். நமக்குப் பகலில் வெளிச்சத்தைக் கொடுக்கச் சூரியனையும், இரவில் வெளிச்சத்தைக் கொடுக்கச் சந்திரனையும் நட்சத்திரங்களையும் கடவுள் படைத்தாரெனவும் கிறித்தவ நூல்களில் கூறப்பட்டுள்ளது. இதற்கு முன் இவ்வுலகில் வாழ்ந்து வந்த பூர்வகால மனிதரும், நமது உலகை நடுவிலும், அதனைச் சுற்றி மற்ற ஆகாயப் பொருள்களாகிய சூரிய சந்திரர்களும், நட்சத்திரங்களும், ஓடிக் கொண்டிருப்பதாகக் கருதினார்கள். பாலமி (Paolemy) என்ற ஓர் பூர்வகால வானசாஸ்திரி, நமது உலகம் நடுவிலிருந்து கொண்டிருக்கவும், மற்ற வானத்தில் பிரகாசிக்கும் லோகங்கள் யாவும் வட்டமாகப் பூமியைச் சுற்றி வருகின்றனவென மிகச் சாதுர்யமாக ஏட்டில் காட்டிவந்தார்.

பிரபஞ்சத்தில் நமது உலகந்தான் சிறந்தது. மற்ற உலகங்கள் யாவும் நமது உலக உபயோகத்திற்கென அமைக்கப்பட்டுள்ளனவென, 2000 வருடமாக நமது முன்னோர்கள் எண்ணி வந்தார்கள்.

ஆனால், 1543-இல் காபர்னிகஸ் (Copernicus) என்ற ஜெர்மன் வானசாஸ்திரி, பண்டைக்கால மதக் கொள்கை தப்பிதமென்றும், பூமி, பல உலகங்களில் ஒன்றென்றும், பூமியும் மற்ற சிறு உலங்களும் சூரியனைச் சுற்றியோடுகின்றனவென்றும் தெரிவித்தார். இந்த ஞானத்தை வற்

புறுத்திய புருனோ (Bruno) என்ற பெரியாரை, மதத்திற்கு மாறாக அவர் கூறியதாக மதகுருக்கள், நெருப்பிலிட்டுக் கொளுத்திவிட்டனர். அதுமுதல் மதக் கற்பனை பின்னடைந்து, அடுத்தடுத்து செய்துவந்த வான ஆராய்ச்சியால், காபர்னிகஸ் பெரியார் சொன்ன விஷயம் நிரூபிக்கப்பட்டு, கோடானுகோடி உலகங்களில் நமது பூமி ஓர் அற்பப் பொருளென எண்ண நேரிட்டது.

நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் கவனிக்க வேண்டிய தென்னவெனில், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்கும் ஏதாகிலும் சம்பந்தம் உளதாவென அறியவேண்டிய விஷயங்களே.

நமக்குத் தெரிந்தவரையில் பிரபஞ்சம் என்னென்ன பொருள்களை உடைத்தாயிருக்கின்றதென முதலில் அறிந்து கொள்வோம். அதன்பிறகு அது எவ்விதமாகத் தற்போது காணும் உருவங்களைப் பெற்றுளது என்பதையும் சுருக்கமாக விளக்கிக் கடைசியாக இத்தியாதி ஆதாரங்களைக் கொண்ட பிரபஞ்சத்தில், கடவுளுக்கு எந்தவித சம்பந்தமாகிலும் வைக்கவேண்டுமா என்பதை யோசிப்போம்.

பிரபஞ்சப் பொருள்களில் நமது உலகம் ஒன்று. இந்த உலகைப் போன்ற நவக்கிரகங்கள் எட்டு. இந்த ஒன்பது உலகங்களும் நடுவிலிருக்கும் சூரியனைச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கின்றன. இந்தக் கூட்டத்தைச் சூரிய திட்டம் (Solar System) என்று அழைப்பார்கள். இந்தத் திட்டத்தில் வால் வெள்ளிகள் (Comets) எரி வெள்ளிகள் (Meteors) அந்தந்தக் கிரகத்தைச் சுற்றும் சந்திரர்கள், இவைகள் மத்தியில் கிடக்கும் தூசு (Dust), கிரணங்கள் (Radiation) சேர்ந்துள்ளன. இந்தத் திட்டத்திலுள்ள பொருள்கள் யாவும் கவர்ச்சி என்னும் சக்தியால் (Gravitation), ஒன்றோடொன்று இழுக்கப்பட்டு ஒரே குடும்பமாக இருந்து வருகின்றன. இந்தக் குடும்பத்தைப் போன்ற வேறு குடும்பங்கள் பிரபஞ்சத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

நமது சூரிய குடும்பத்திற்கு அப்பால் நட்சத்திரங்கள் இருக்கின்றன. சில நட்சத்திரங்கள் தனித்துவம், சில கும்பலாகவும் (Star Clusters) ஆகாயத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன. இரட்டை நட்சத்திரங்களாகவும், மூன்று நான்கு சேர்ந்த கூட்டங்களாகவும் பல நட்சத் திரங்கள் இருக்கின்றன. இவைகளன்னியில் சில மேகங் களைப் போல் தென்படும் ஆவியும் (Nebula) கலந்து இருக்கின்றன. இவை யாவும் சேர்ந்து நட்சத்திர திட்டமென (Steller System) வழங்குவர். இந்த நட்சத்திரத் திட்டம் அல்லது குடும்பத்தில் நமது சூரியனும், கிரகங்களும், வால் வெள்ளி, எரிவெள்ளி சந்திரர்கள் யாவும் சேர்ந்தவை. இந்த பெரிய குடும்பத்தில் நமது உலகம் எங்கோ ஓர் மூலையில் கிடந்து வருகின்றது. இந்த நட்சத்திரக் குடும்பத்தை காலக்ஸி (Galaxy) என்று அழைப்பார்கள். இந்தக் குடும்பத்தில் லட்சங்கோடி நட்சத்திரங்கள் உளவாம்.

இந்தக் காலனி அதாவது நமக்கருகிலுள்ள நட்சத்திரக் குடும்பத்திற்கு அப்பால் மெடகாலனி (Metagalaxy) என்று அழைக்கப்படும் பெரிய நட்சத்திரக் கூட்டங்கள் இருக்கின்றன. இந்த மெடகாலனியில், கோடானுகோடி நட்சத்திரங்கள் உளவாம்!!

இவையாவும், நமது உலகை இருந்த இடத்தில் இருக்கச் செய்யும் கவர்ச்சி (Gravitation)யில், ஆளப்பட்டு வருகின்றனவாம். இங்கும், அங்கும், எங்கும் கவர்ச்சியால் பிரபஞ்சப் பொருள்கள் சகலமும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டு இருக்கின்றனவாம்!!! இத்தியாதி பொருள்களும் மகத்துகள் எனப்படும்.

இனி அணுக்களை விசாரித்தறிவோம். மகத்துக ளெல்லாம், அணுக்களின் (Atoms) சையோகத்தால் கூட்டப் பட்டவை. அணுக்கள், பரமாணுக்களால் (Electrons and Protons) கூடியவை. இவைகளுக்கு மேற்பட மாலிகூல்ஸ்

(Molecules) என்ற அணுத்திரள்கள் இருக்கின்றன. இந்த அணுத்திரள்களால்தான் நாமும் நமது உலகத்திலுள்ள பல சேதன அசேதனங்களும் உருவடைத்திருக்கின்றோம்.

சென்ற 25 வருடங்களாகச் செய்துவரும் ஆராய்ச்சி யில் அணுக்களும், அணுத்திரள்களாகிய நாமும் இழுக் கும் சக்தியால் (Attraction) கட்டுண்டு தனிப்பொருள் களாக இருந்து வருகின்றோம். ஆதலின், நமது தேகமும் அதற்குக் கீழாகவுள்ள அணுக்களும், அணுத்திரள்களும்; இவைகளுக்கு மேலாகவுள்ள சூரிய சந்திர நட்சத்திரக் கூட்டங்களும் கவர்ச்சியால் கட்டுண்டு பிரபஞ்சத்தில் உலாவுகின்றன. இதைத் தவிர வேறெந்த அறிவோ, மனமோ, சைதன்யமோ, சத்தோ, சித்தோ, ஆன்மாவோ, கடவுளோ, தெய்வமோ தெரிந்துள்ள பிரபஞ்சத்தையும், அதில் அடக்கியுள்ள நம்மையும், நமக்கு மேலும் கீழுமுள்ள பொருள்களை நடத்துவதை மனிதர்களாகிய நாமறிவோம்.

பிரபஞ்ச உற்பத்தியைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகள் இந்தக் கவர்ச்சியே பரமாணுக்களிலிருந்து உண்டாகும் பிரபஞ்சப் பொருள்களுக்கு மூல காரண மெனவும் தெரிவிக்கின்றார்கள். ஆதலின், பிரபஞ்சம் உண்டாகும்போதும் தற்போதும் கவர்ச்சியால் சகலப் பொருள்களும் ஆளப்பட்டு வந்திருக்கின்றன. இதுதான் அனுபவஞானம். பிரபஞ்சம் கடவுளால் சிருட்டி என்பதும் மனத்தினால் எண்ணித் தானே வந்ததென்பதும் ஈசுவர னுடைய அருளால் நடைபெறுகிறதென்பதும் கற்பிதங் களென அறிக. இதுதான் விஞ்ஞான ஆராய்ச்சியால் இதுவரையிலும் நமக்குத் தெரிந்துள்ள விஷயமாகும்.

### அனுபந்தம் 1

# கோழி முதல் உண்டானதா?

அல்லது

# முட்டை முதல் உண்டானதா?

### இரங்கூன் நிருபருக்கு விடை

நாம் எழுதிய "கடவுளும் பிரபஞ்சமும்" (God and the Universe) என்னுங் கட்டுரைகளைப் படித்ததன் மூலம் தமக்குண்டான சில சந்தேகங்களை விளக்குமாறு இரங்கூனிலிருந்து ஒரு நிருபர் கீழ்க்கண்ட கடிதத்தை நமக்கு எழுதினார்.

*அய்யா,*

"குடி அரசு" பத்திரிகையில் வெளியிட்டு வந்த தங்களுடைய (God and the Universe) "கடவுளும் பிரபஞ்சமும்" என்னும் கட்டுரையானது என்னை மயங்கச் செய்கிறது. ஆகையால் தங்களுக்கும் கொஞ்சம் கஷ்டத்தைக் கொடுத்து என் சந்தேகம் நிவர்த்தி செய்துகொள்ளலாமென்று இக் கடிதம் எழுதலானேன், மன்னிக்கவும்.

*1. கோழி முதல் உண்டானதா? அல்லது முட்டை முதல் உண்டானதா?*

*2. இவைகள் இரண்டில் எது முதலில் உண்டானது? அல்லது எப்படி உண்டானது? அதை யார் உண்டாக்கினது என்பவைகளே.*

தயவுசெய்து "குடி அரசு" வாயிலாகத் தாங்கள் அன்பான பதிலை வெளியிட்டால், என்போன்ற சந்தேகமும், மனக்குழப்பமும் உடையவர்களுக்குப் பேருதவியாக இருக்குமென்று நம்புகின்றேன்.

இந்தக் கடிதத்தில் நமது இரங்கூன் நிருபர் கேட்டுள்ள இரண்டு கேள்விகளைச் சுருக்கமாக ஒரு கேள்வியாக அதாவது "முதலில் உண்டானது கோழியா, முட்டையா?" என்று வரைந்து அதனை விளக்குவோம். இந்தக் கேள்வி புராதனக் கேள்வி. உயிர்கள் உற்பத்தியைப் பற்றி, மெய்ஞ்ஞானம் தனது வெளிச்சத்தை வீசுவதற்கு முந்தி, கேட்டுவரும் கேள்விகளில் இதுவும் ஒன்று.

ஜீவப் பொருள்கள் அதாவது தாவரங்களும் பிராணிகளும் (Plants and animals) வந்த விதத்தை அறிவதற்கு முன் இவ்விதக் கேள்விகள் கேட்கப்பட்டு வந்தன. உலகம் வந்தவிதமென்ன? உயிர்கள் வந்த விதமென்ன? பிரபஞ்சம் வந்தவிதமென்ன? மனிதன் வந்தவிதமென்ன? ஆகிய கேள்விகளுக்கெல்லாம் ஒரே விடை அளித்துவந்தார்கள். அதாவது பிரபஞ்சம் ஈறாக வுள்ள உயிர்கள் உள்பட சகலவஸ்துகளும் "சிருட்டி" (Creation) என்றார்கள். ஆனால், சில தத்துவ ஞானிகள் (Philosophers) ஆதிகால முதல் பிரபஞ்சப் பொருள்கள் யாவும் "பரிணாமத்தால்" (Evolution) வந்தனவென்று யூகித்து வந்தார்கள். இதைத் தான், "சத்தமாம் சோதி தன்னில், சொல்லிய விண்ணும் விண்ணில்......" என்று பிரபஞ்ச உற்பத்தியைப் பற்றி கைவல்ய அதிகாரி எழுதி யுள்ளார். ஆனால், இவைகள் யாவும் வெறும் உத்தேசங் களாக இருந்துவந்தன.

சென்ற 100 வருடங்களுக்கு முன்தான் பிரபஞ்ச உற்பத்தியைப் பற்றியும், உலக உற்பத்தியைப் பற்றியும் மனித உற்பத்தியைப் பற்றியும் விஞ்ஞானம் விசாரிக்கப் புகுந்தது. அது முதல் தனது ஆராய்ச்சியாலும் பிரத்தியட்ச அனுபவத்தாலும் இந்தக் கேள்விகளுக்கு இயற்கை யாயுள்ள விடைகளைக் கொடுத்து வர, விஞ்ஞானம் (Science) சக்தி பெற்று வருகிறது.

நமது இரங்கூன் நிருபர் கேள்விக்கு விஞ்ஞானம் என்ன விடை கொடுக்கின்றதென்று பார்ப்போம். முட்டை

முந்தியதா? அல்லது கோழி முந்தியதா? என்றால், கோழி முட்டையும் கோழியும், இவை இரண்டில் ஒன்றும் முந்தியவை அல்ல. நாம் பார்க்கும் கோழியும் அதன் முட்டையும் ஒரு காலத்தில் தோன்றியவைகள் அல்ல. பலகோடி வருடங்களாக இவை இரண்டும் வேறு உருவங்களாக இருந்து பரிணமித்து வந்தவை. கோழி, பட்சி வகையை (Birds)ச் சேர்ந்தது. பட்சிகள், ஓணான், பல்லி முதலிய ஊர்வன (Reptiles) மூலமாகப் பெறப்பட்டவை. ஊர்வனங்கள், தவளைக் கூட்டங்களிலிருந்து (Amphibians) மாறியவை. தவளைகள் மீன் வடிவங்களிலிருந்து (Fishes) உண்டானவை. மீன்கள் புழுப் பூச்சிகளாக இருந்து (Worms) மாறியவை. புழுப் பூச்சிகள் சிறுசிறு கிருமிகளால் (Microbes) சையோகம் பெற்று வந்த உயிர்கள். கிருமி இன்னும் சிறு சிறு முட்டைகளால் (Cells) கூட்டப் பட்டவை. இந்தச் சிறு சிறு முட்டைகளால்தான் உலகிலுள்ள உயிர் பெற்ற பொருள்கள் யாவும் கட்டப்பட்டுள்ளன. நாமும் நமக்குக் கீழாகவுள்ள மிருகாதிகள், பட்சி, பறவைகள், தவளை, மீன், புழுப்பூச்சி முதலியவை யாவும் சிறு முட்டைகளால் (Cells) ஆக்கப் பெற்றுள்ளன. இந்த கோடானுகோடி முட்டைகளில் ஒன்று நமது தேகத்தினின்றும், அல்லது கோழி தேகத்தினின்றும் சுக்கில சுரோணிதங்களாக (Sperm and egg) மாறி சையோகத்தில் கர்ப்பத்தில் வந்து மனித உருவமாகவும், கோழி முட்டையாகவும் அந்தந்த உயிருக்குத் தக்கபடி வளர்கின்றன. எல்லா உயிர்களும் மேற்கூறிய முட்டை வடிவத்திலிருந்தே கர்ப்பத்தில் தரித்து அந்தந்த உயிர்வகையாக வளர்கின்றன. மனிதன் ஈறாகவுள்ள சகல உயிர்களும், செடி, புல், மரமாக இருந்தாலும் சரி, கிருமி, மீன், கோழி, மிருகம், மனிதனாக இருந்தாலும் சரி சகல உயிரும் வித்து அல்லது முட்டையிலிருந்தே உண்டாகின்றன.

தாவர வித்துக்கும், பிராணி முட்டைக்கும் வித்தியாசம் அதிகமில்லை. உயிர்கள் யாவும் அதனதன் முட்டையிலிருந்தே உற்பத்தியாகின்றன. உயிர்கள் உண்டாகும் முட்டைக்கும் "செல்" (Cell) என்ற பெயர். கோழி முட்டையில் உயிர் முட்டை நடுவில் கண்ணுக்கு எட்டாத வடிவமாக இருக்கின்றது. மற்றவெள்ளை அம்பிலியும், மஞ்சள் அம்பிலியும் அந்தச் சிறு முட்டையிலிருந்து வளரும் குஞ்சுக்கு உணவாக இருந்து வருகிறது. இவ்விதமாகவே எல்லா உயிர்களும் சிறு முட்டையிலிருந்தே பரிணமிக்கின்றன. நாமெல்லோரும் உற்பத்தியாகும் வித்து 120 பங்காக ஒரு அங்குலத்தை வகுத்து, அதில் ஒரு பாக மாத்திரையைக் கொண்டுள்ளது. (1/120 of an inch) என அறிக. இந்த அற்ப உருவந்தான் புத்தராகவும், ஏசுவாகவும், மகம்மது ஆகவும், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகராகவும் பரிணமித்தது. உலகில் இன்று வசித்துவரும் பலகோடி ஜீவராசிகள் ஆதியில் இச்சிறு முட்டையிலிருந்து பரிணமித்தவைகள் என்றால், அந்த ஆதி முட்டை (Premitive Cell) ஆதியில் எங்கிருந்து பெறப்பட்டு இருக்கலாமெனக் கேட்கலாம். இதற்கு விடை அளிக்கத் தான் பிராணி விஞ்ஞானிகளும் (Biologists) பூத பௌதிக விஞ்ஞானிகளும் (Physico - Chemists) ஆராய்ச்சி ஸ்தாபனங்களில் கண்டறியப்பாடுபட்டு வருகின்றார்கள். இதன் இரகசியம் எந்தக் காலத்தில் விளங்கினாலும் விளங்கட்டும். இப்பொழுது தெரிந்தவரையில் எல்லா உயிர்களும் சிறு கிருமியாகிய முட்டையிலிருந்தே உண்டாகின்றன. இரண்டாவது, எல்லா உயிர்களும் நாளடைவில் ஆதிகால உயிர்களிலிருந்து பெறப்பட்டவை. தற்கால உயிர்கள் முற்கால உயிர்களிலிருந்தும் முற்கால உயிர்கள், அவைகளுக்கும் சிறிய உயிர்களிலிருந்தும் உண்டானவை. அத்தியாதி சிறிய உயிர்கள் ஆதியில் சிறுசிறு முட்டைகளிலிருந்து பெறப்பட்டிருக்கவேண்டும். அச்சிறு முட்டைகள் ஓர் சிறிய ஆதி முட்டையிலிருந்து

வளர்ந்திருக்க வேண்டும். அந்த ஆதி முட்டை (Primordial Cell) அதற்கும் சிறிய முட்டையிலிருந்தும் (Bacteria, Viruses) இவை போன்ற உயிரும் உயிருமில்லாத பொருள்களிலிருந்தும் உற்பத்தியாகி யிருக்கலாமென்பது தற்கால மெய்ஞ்ஞான யுக்தி என்று சொல்லலாம். உலகம் ஒரு காலத்தில் உயிரற்று இருந்தது. உயிர் முளைக்க உலகம் பக்குவ மடைந்த காலையில் கல்லாய்டு (Colloid) என்ற குழப்பிய பதார்த்தங்கள் உண்டாயிருக்க வேண்டும். அந்தப் பதார்த் தங்களிலிருந்து பிரோடபிலாசம் (Protoplasm) என்ற ஆதி உயிர் கல்லாய்டு பொருள் பிறந்தது. அதிலிருந்து ஆதி முட்டை (Primitive Cell) உண்டாகி அது பரிணமித்து பல்வேறு உயிர்களாகப் பரிணமித்தன என்பது மெய்ஞ் ஞான யூகை.

நமது இரங்கூன் நிருபர் கேள்விக்கு (முட்டை முந்தியதா? அல்லது கோழி முந்தியதா?) என்ன விடை எனில், தற்கால கோழி பூர்வ கால காட்டுக்கோழியிலிருந்து பெறப் பட்டது. ஆதிகோழி ஆதி பட்சியிலொன்று. ஆதிபட்சி, ரின்கோஸெபேலஸ் (Rhyncocephalus) என்ற ஊர்வன வகையிலொன்று. இதைப்போன்று மேல்குறித்த வண்ணம் ஆதி தவளை, ஆதி மீன், ஆதி புழு முதலிய உருவங்களிலிருந்து இவைகள் பலமுட்டை உருவங்களி லிருந்தும், பல முட்டைகளில் ஒரு முட்டை உயிரிலிருந்து அந்த ஆதி முட்டையும், அந்தக் காலத்து சில ரசாயனப் பொருள்களாகிய பொட்டாசியம் (Potassium), திமுறி பாஷாணம் (Phosphorus) இரும்பு (Iron), கரி (Carbon) முதலியவைகளால் சையோகப்பட்டு வந்திருக்க வேண்டும். ஏனெனில், எல்லா உயிர் முட்டைகளும் மேற்கூறிய வஸ்துகளால் ஆக்கப்பட்டிருப்பதால் இவைகளுக் கெல்லாம் ஆதி முட்டையும் இந்த வஸ்துகளாலேயே ஆக்கப்பட்டிருக்கலாமென்பது அனுமானம். தற்கால முட்டையும், கோழியும், அதன் முட்டையும் முதலன்று. அவைகளுக்கெல்லாம் முதல் நமது உலகிலுள்ள

தாதுக்களே. இந்த மூல தாதுக்கள் எங்கிருந்து வந்தன? சூரியனிடமிருந்து வந்தன. சூரியன் எங்கிருந்து வந்தது? இதை வான நூலில் தெரிந்து கொள்ளலாம்.

ஆதலின் நீரும், நானும், நமது நிருபரும், சகல உயிர்களும் மண்ணிலிருந்தே பிறந்தது. கடைசியில் ஒரு பிடி மண்ணாக ஆவதே உலக அனுபவம். இந்த அனுபவத்தை எண்ணியாகிலும், நம்மைச் சுற்றி வாழும் பாமர மக்களை வஞ்சியாது, அவர்களுக்கு உண்மை ஞானத்தை உரைத்து, அவர்களைப் புனிதர்களாக்க முயல்வோமாக! இந்த உயர்ந்த ஞானமாகிய பரிணாமத்தை இவ்விடம் சுருக்கமாக உரைக்கச் சந்தர்ப்பம் அளித்த நமது தோழர் இரங்கூன் நிருபரைப் பாராட்டுகிறோம்.

## அனுபந்தம் - II

# கல்லுக்குள் தேரையும் மாங்கொட்டையில் புழுவும்

### இவை ஈசன் சிருஷ்டியா?

ஈரோட்டிலிருந்து ஒரு நிருபர் கீழ்க்கண்ட கடிதத்தை நமக்கு அனுப்பி, "கடவுளும் பிரபஞ்சமும்" என்னும் வியாசத்தில் சில சந்தேகங்களைக் கேட்டுள்ளார்.

**திரு.மா.சிங்காரவேலு அவர்களுக்கு, தாங்கள் "குடி அரசு" பத்திரிகையில் எழுதிய "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற வியாசத்தைக் கண்ணுற்ற என்னை யஃது பல சந்தேகத்தில் ஆழ்த்திவிட்டது.**

**ஆதலின் இதே பத்திரிகையின் மூலமாக அடியிற் கண்ட கேள்விகளுக்குத் தகுதியான பதில் வெளியிடுவீர்களானால் என் சந்தேகம் ஒரு வகையில் நீங்குமென்று நினைக்கின்றேன்.**

**கேள்விகள்:**

1. *கல்லுக்குள் தேரை எப்படி ஏற்பட்டது? கடவுள் உதவியில்லாமல் அது எப்படி ஜீவிக்க முடியும்?*
2. *மாம்பழத்தின் கொட்டையில் காற்றுப் புகக் கொஞ்சங் கூட வழியில்லாமலிருக்கையில், அதற்குள் இருக்கும் வண்டு, புழு ஆகியவை கடவுள் உதவியில்லாமல் எப்படி ஜீவிக்க முடியும்?*

நமது ஈரோடு நிருபர் கல்லுக்குள் தேரை எப்படி வந்ததென்றும், மாங்கொட்டையில் வண்டு, புழு எவ்விதம் வந்து ஜீவிக்கின்றதென்றும், வினயத்துடன் வினாவுகின்றார். அவை, கடவுள் உதவியில்லாமல் எப்படி

உண்டாகி ஜீவிக்குமென்கிறார். இவ்வித கேள்விகள் பண்டைக் காலத்துத் தவறான பார்வையால் (Observation) எழுகின்றன. மாபெரும் ஞானிகளும் பழைய காலத்தில், தவறான அபிப்பிராயங்களை இத்தியாதி விஷயங்களில் கொண்டிருந்தனர். குளவி, புழுக்களைக் கொண்டுவந்து, தன்னைபோல் மாறும்படி செய்வதாகச் சில ஞானிகளும் பாடியுள்ளனர். மனிதர் பலநாள் காற்றும் இல்லாமல் குகைகளில் வாசம் செய்வதாகவும், மண்ணில் புதைக்கப் பட்டுச் சிலநாள் கழித்து, உயிருடன் மேலெழுவதாகவும் இதைப் போன்ற சில அற்புதங்களென்று (Miracles) கூறும் நடவடிக்கைகளைக் கேட்டு அநேக பாமர மக்கள் ஆச்சரியப்படுகின்றார்கள். இவைகளெல்லாம் தவறான பார்வையால் உண்டாகும் மருள். கவனித்துப் பார்க்கும் பட்சத்தில் இத்தியாதி தோற்றங்களில் ஆச்சரியமொன்று மிரா. இந்தக் கேள்விகளை ஆங்கில சிறுவர் சிறுமிகள் கேட்பதரிது. ஏனெனில், அவர்களைச் சிறுவயது முதல் பிராணிகள் நூலைக் கற்கச் செய்கின்றனர். அத்தியாதி மெய்ஞ்ஞானத்தைப் புகட்டாமல், நமது சிறுவர்களுக்கு, "ஆத்திசூடி அமர்ந்த தேவனை" என்று வித்தியாப் பியாசத்தைத் தொடங்கும் தோஷத்தால் நமது சிறுவர் களும் பெரியோரும் சாதாரண பிரகிருத விஷயங்களைத் தெரிந்துகொள்ள சக்தியற்றவர்களாகின்றார்கள்.

சாதாரண அற்ப உயிர்களாகிய பல்லி விழுவதையும், சாதாரணமாக ஜலதோஷத்தால் தும்முவதையும், ஏதாகிலும் பேசுகையில் மணி அடிப்பதையும் நல்ல சகுனங்களெனக் கருதும் மூடப் பழக்கங்கள், சாதாரண விஷயங்களை விசாரித்தறியாத தோஷத்தாலென அறிதல் வேண்டும். பல்லி விழும் பலனைப் பற்றிக் குறிப்பிடாத பஞ்சாங்கம் நமது தமிழ்நாட்டில் கிடைப்பதரிது.

ஒற்றைப் பார்ப்பனனைக் கண்டாலும், எண்ணெய்க் குடம் எதிரிட்டாலும், விதவை எதிர்ப்பட்டாலும் கோரிய

காரியம் நிறைவேறாவென்று எண்ணுவதும் இந்த அறியாமையால்தான் - இவ்வித பொய் நம்பிக்கைகளால் கெட்ட குடும்பங்கள் எத்தனை? அரசுகளும் எத்தனை?

கல்லுக்குள் தேரை இருப்பது சகஜமான விஷயம். கற்பாறைகள் சந்து இல்லாமலிருப்பதாக நமது கண்களுக்குத் தோன்றினும் நுட்பமான சந்துகள் (Crevices) பல கற்பாறைகளிலிருக்கின்றன. பூதக் கண்ணாடியைக் கொண்டு கற்பாறைகளைப் பார்த்தால், சிற்சில கீறல்கள் தோன்றும். இத்தியாதி கீறல்களின் வாயிலாகத் தேரையின் நுட்பமான முட்டை நுழையலாம். தவளை முட்டை மிகச் சிறியதாக இருக்கும். சந்துகளில் தண்ணீர் இறங்குவது சகஜம். அந்தக் காலங்களில் தேரை முட்டையில் ஒன்றிரண்டு தண்ணீருடன் கல் சந்தின் வழியாகச் சென்று, கற்களில் சகஜமாகவுள்ள போரைக்குள் தங்கித் தண்ணீரில் ஜீவித்தும் வளர்ந்தும் வரும். அதற்குணவு தண்ணீரிலுள்ள அழுக்கும், சிறிய கிருமிகளுமே. தேரை தங்கி வாழும் போரையிலுள்ள தண்ணீரைப் பரீட்சித்துப் பார்த்தால், அதில் அடங்கியுள்ள தவளைக்கு வேண்டிய உணவுகள் தெரியவரும். இதை மிக எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

பழத்தில் வண்டுகள் நிறைந்திருப்பது ஆச்சரியமல்ல. வண்டின் கிருசாலீஸ் (Chrisalis) அதாவது, அதன் முட்டையிலிருந்து வரும் புழு மெல்லிய பழத்தோலைக் குத்திக் கொண்டு உட்செல்லும். சிரங்கு முதலிய கிருமிகள் போலவே வண்டு முட்டைகளும் பழங்களில் உட்செல்லுகின்றன. பழங்களில் புழு முட்டைகள் உள் நுழைய சந்தில்லை என்று சொல்வது அறியாமை. பூதக் கண்ணாடியால் பார்த்தால் நமது தோலில் உள்ள சந்துகளைப்போன்றே, அநேக ஆயிரம் சந்துகளுள்ளதை (Pores) பார்க்கலாம். சூரியகிரணமும் காற்றும் நுழையாத இடமொன்றுமில்லை என்றே சொல்லலாம். இவை இரண்டில் சீவிக்கும் உயிர்கள் பலவுள.

அசைவற்று இருக்கும் உயிர்களுக்கு உணவு அதிகம் வேண்டுவதில்லை. உழைப்பவனுக்குத்தான் பசி அதிகம். உழைக்காத சந்நியாசிக்கு அதிக உணவு வேண்டியதில்லை. ஆதலின் பள்ளத்தில் புகைக்கப்பட்டவன், சிலநாள் அன்ன ஆகாரமின்றி உயிருடன் இருக்கலாம். தவளை அநேக நாள்களாக ஈரம் உண்டாகும் வரை காய்ந்த கருவாடு போல் கிடப்பது சாதாரணம். அதுபோலவே மனிதனும் கருவாட்டைப்போல் இருக்க வேண்டுமானால், அதில் யாதொரு மகத்துவமுமில்லை.

நமது ஈரோடு நிருபர், கல்லிலுள்ள தேரைக்கும், பழத்திலுள்ள புழுவுக்கும் வேண்டிய உணவைக் கடவுள் அளிப்பதாக எண்ணுகின்றார் போலும்! ஆனால், நமது நிருபருக்கு எந்தக் கடவுள் அன்றாடம் வேண்டிய உணவைக் கொடுக்கிறார் என்று கேட்கின்றோம். விளையும் உணவை உண்டு வருவது பிரத்யட்சம். அதற்குமேல் கடவுள் நமது உணவை அளிக்கின்றார் என்பது கற்பிதம். அதுபோலவே தேரைக்கும் வண்டுக்கும் அவை வசிக்கும் இடங்களில் கிடைக்கக்கூடிய காற்று, ஜலம், அழுக்கு, சிறு கிருமிகள் முதலிய உணவாகி ஜீவிக்கின்றன. அதற்குக் கடவுள் ஒருவர் ஏன் வேண்டுமென்பது விளங்கவில்லை! நமது நிருபருக்கும், தேரைக்கும், தவளைக்கும், புல் பூண்டுகளுக்கும் வேண்டிய உணவை அளிக்க, கடவுள் ஒருவர் வேண்டும் என்பது அனாவசியம்.

சுருங்க உரைக்கில், கற்பாறைகளில் பிளவுகள் (Cracks) இருக்கின்றன. பிளவுகள் மூலமாக மழைத் தண்ணீரில் கிடக்கும் தவளை அல்லது தேரை முட்டைகள், கல் போரையின் மூலமாகக் கொண்டுபோகப்பட்டு பாறைக்குள் வளர்கின்றன. தவளை வழவழப்பான பிராணியாதலால், ஈரமிருந்தால் போதும். தேரை கற்குள் அசைவற்றிருக்கிற படியால் வேண்டிய உணவு சொற்பம்.

காற்றும் வெளிச்சமும் இருந்தால் எந்த உயிரும் வேண்டிய நேரம், மற்ற உணவின்றி ஜீவிக்கலாம். இதுதான் "கல்லுக் குள் இருக்கும் தேரையின்" வாழ்க்கையின் சரித்திரம். வேண்டுமானால் சிறு தவளையை சிறு பெட்டியில் போட்டு, காற்றுக்கும் ஈரத்திற்கும் சிறு துவாரத்தை விட்டுப் பார்த்து எந்த ஈசன் அதற்கு உணவு அளிக் கின்றான் என்பதைத் தெரிந்து தெரிவிக்குமாறு நமது அன்பு மிகுந்த நிருபரை வேண்டிக்கொள்கின்றோம்.

வேண்டுமானால் காற்று, கிரணம், ஜலம் நுழைய வழியில்லாத பெட்டி ஒன்றில் (Hermetically Closed Box) ஒரு தவளையை இரண்டொரு நாள் மூடி வைத்த பிறகு அதை உயிருடன் பார்வதி, பரமசிவன் வைத்திருக்கின்றார்களா என்று தெரிந்து நமக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

● ● ●

# BIBLIOGRAPHY

## சில ஆதார புத்தகங்கள்


1. நட்சத்திரங்களும் அணுக்களும் - Stars and Atoms by Eiddington. (1927)
2. குழப்பத்திலிருந்து ஓட்டம் - Fight from Chaos by Shapley (1931)
3. நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்சம் - The Universe around us by Jeans. (1930)
4. கடவுளும் பிரபஞ்சமும் - God and the Universe by Cohen (1931)
5. பிரபஞ்ச உயிர் - Life of the Universe by Archeneus (1909)
6. அணுக்களும் மூலவஸ்துகளும் - Elements and Electrons by Ramsay. (1912)
7. அணுக்களுக்கப்பால் - Beyond the Atom by Cox. (1913)
8. வான ஞானமும் பிரபஞ்ச ஞானமும் - Astronomy and Cosmogony by Jeans. (1928)
9. பூர்வ மனிதநூல் - Anthropology by Taylor.
10. பொன் கிளை - Golden Bough by Frazer.
11. மனிதனும், கடவுளும், நித்திய வாழ்வும் - Man God and Immortality by Frazer.
12. நடத்தை - Behaviourism by Watson (1931)

மா. சிங்காரவேலுவின்

# கடவுளும் பிரபஞ்சமும்



GO 1009

நூல் கிடைக்குமிடம் :

நூலங்காடி...
www.gowrabookfair.com
e-mail : gowra_09@yahoo.in

கௌரா ஏஜென்ஸீஸ்
10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

ரூ. 2